Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 7.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | புரட்டாதி 02 | சனிக்கிழமை | (18.09.2004) | தொலைபேசி - 2223378 | ஓலை 274

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சீமெந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# சமாதான முன்னெடுப்புக்களுக்கு பூரண ஆதரவு வழங்குவோம்!

## கனேடியத் தூதர் கிளிநொச்சிக்கு வருகிறார்

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை கனேடியத் தூதரக அதிகாரிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை சந்தித்துப் பேசவுள்ளனர்.

இச் சந்திப்பு கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிப்பது தொடர்பாகவும் வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் ஏற்படுத்தப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் இச் சந்திப்பின் போது ஆராயப்படவுள்ளது. (ச)

## எரிக்சொலிடம் ரணில் உறுதி





(நமது நிருபர்)

**நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நேற்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில்விக்கிரமசிங்கவைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.**

**இச் சந்திப்பில் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முன்னெடுப்புக்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு குறித்து விரிவாக ஆராயப்பட்டது.**

இலங்கையின் அமைதி முயற்சியில் சாதகமான, ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில், இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் எரிக்சொல்ஹெய்ம் தொடர்ந்து சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து முக்கிய தரப்புக்களுடன் பேச்சு நடத்திவருகிறார்.

ஜனாதிபதி, பிரதமர், விடுதலைப் புலிகள் என்ற வகையில் பேச்சுக்களை நடாத்தி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ்மா அதிபர் வவுனியா செல்கிறார்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா இன்று வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

வவுனியா, மன்னார் மாவட்ட பொலிஸ் உத்தியோகத்தரின் நலன்கள் பற்றி அறிந்து கொள்வதுடன் அம் மாவட்டங்களின் பாதுகாப்பு நிலைமைகளையும் நேரில் சென்று பார்வையிடுவதற்காகவே அவர் அங்கு செல்கிறார்.

மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு யோசப்பையும் பொலிஸ்மா அதிபர் சந்தித்துக் கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-08)

## ஐ.நா. அபிவிருத்தித்திட்ட பிரதிநிதிகள் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரதிநிதிகள் இருவர் நேற்று யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்து இங்குள்ள நிலைமைகள் பற்றி ஆராய்ந்துள்ளனர்.

யாழ். மனித உரிமை ஆணைக்குழுவுக்கு விஜயம் செய்த அவர்கள் குடாநாட்டின் இயல்பு நிலை குறித்தும் மனித உரிமை மற்றும் மீள்குடியமர்வு தொடர்பான விடயங்கள் குறித்தும் ஆராய்ந்தனர். பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமான இச் சந்திப்பு பிற்பகல் 4 மணிவரை இடம்பெற்றது.

இதேவேளை யாழ். மாவட்ட அரச சார்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தென்பகுதி ஊடகவியலாளர்கள் இளம்பரிதியுடன் நேற்று சந்திப்பு

(திருநெல்வேலி)

மாற்றுக்கொள்கைகளிற்கான ஊடக அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். குடாநாட்டிற்கு வருகை தந்த 30 தென்னிலங்கை ஊடகவியலாளர் குழுவினர் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதியைச் சந்தித்து குடாநாட்டு நிலைபரம் பற்றி ஆராய்ந்துள்ளனர்.

இச் சந்திப்பின் போது குடாநாட்டில் உள்ள பாதுகாப்பு வலயங்கள் காரணமாக தமிழ் மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் பற்றி இளம்பரிதி எடுத்து விளக்கினார்.

இதேவேளை இக் குழுவினர் குடாநாட்டில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கும் விஜயம் செய்து அங்கு வாழும் மக்களின் வாழ்வியல் நிலைமை பற்றி ஆராய்ந்துள்ளனர்.

இத்தைவிட யாழ்ப்பாணம் சிற்றி விடுதியில் இயங்கும் ஊடகவியலாளர்கள் பயிற்சி மையத்தில் ஊடக மைய இணைப்பாளர் அருட்செல்வம் யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத் தலைவர் தவச்செல்வன் ஆகியோரைச் சந்தித்து குடாநாட்டு பத்திரிகையாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிந்தனர். (த-43)

## குவைத்தில் கடும் சித்திரவதை 36 பெண்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து வேலை வாய்ப்புக்காக குவைத்திற்குச் சென்று அங்கு நிர்க்கதியான நிலையில் இருந்த 36 இலங்கைப் பெண்கள் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

இப் பெண்கள் வேலைக்கமர்த்தப்பட்டவர்களினால் பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். தாம் சித்திரவதைகளுக்கு ஆளானமைக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களே பொறுப்பேற்க வேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர்.

இத்தகைய சம்பவங்களை தடுத்து நிறுத்துவதற்கு, குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (த-08)

## குமுதினி சேவை நேற்று ஆரம்பம்

(நெடுந்தீவு)

குறிகாட்டுவானுக்கும் நெடுந்தீவுக்கும் இடையிலான போக்குவரத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான குமுதினிப் படகு நேற்று சேவையில் ஈடுபட்டது.

குமுதினிப் படகு சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பெருமளவான மக்கள் நேற்று போக்குவரத்தை மேற்கொண்டனர்.

இதுவரை காலமும் இருந்து வந்த பிரயாண நெருக்கடி ஓரளவு தீர்ந்துள்ளதாக நெடுந்தீவு மக்கள் தெரிவித்தனர். (ச)

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் யாழ். செயலகத்தில் நடைபெற்றது

### மாவையின் தலைமையில் கல்வி, விவசாயம் பற்றி ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கல்வி, விவசாயம் தொடர்பாக ஆராயப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் கல்விச் செயற்பாடுகளின் முன்னெடுப்பு அவற்றில் உள்ள குறைபாடுகள் என்பன குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தமது வலயத்தில் நிலவும் கல்விக் குறைபாடுகள் குறித்து தெரிவித்ததுடன் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான கோரிக்கைகளை முன்வைத்தனர். மேலும் விவசாயத் துறையை விருத்தி செய்வதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் குறிப்பாக மீள் குடியமர்வு, மீள் குடியமர்வுக் கொடுப்பனவுகள் போன்ற விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், சுரேஸ் பிரேமச்சந்திரன், ஈழவேந்தன், சிவனேசன், ரவிராஜ் ஆகியோரும் யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன், திட்டமிடல் பணிப்பாளர் பு. சுந்தரம்பிள்ளை, மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி மகாலிங்கம், ஐந்து கல்வி வலயங்களினதும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வி மேம்பாட்டு பேரவைத் தலைவர் அ. சண்முகதாஸ், கல்வி கழகப் பொறுப்பாளர் அருண் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (த-19-43)

## இராணுவம் - புலிகள் புதனன்று சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் - இராணுவ அதிகாரிகளுக்கும் இடையில் எதிர்வரும் புதன்கிழமை சந்திப்பு நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் அமைப்பின் போராளிகள் மீதான திட்டமிட்ட தாக்குதல் சம்பவங்களையடுத்து இத்தகைய சந்திப்புகளிலிருந்து கடந்த யூன் மாதம் முதல் விடுதலைப் புலிகள் விலகியிருந்தனர்.

கடந்த மாத இறுதியில் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் ரொன் புறூவ் ஹெவ்டே மட்டக்களப்புக்குச் சென்று விடுதலைப் புலிகளுடனும், இராணுவத்தினருடனும் தனித்தனியாக மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளையடுத்து இந்த சந்திப்புக்களை தொடர இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டுடன் திகதியும் தீர்மா

(12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நீர் உயிர்வள ஆசிரியர் சங்கம்

# தமிழ் கூட்டமைப்பு எம்.பிகளிடம் மகஜர்களைக் கையளித்தது

(யாழ்ப்பாணம்)

நடைபெற்ற முடிந்த ஆசிரிய ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சையில் - 2004 பிரகாரம் கடல் வள தொழி னுட்பப் பாடத்திற்கு வடகிழக்குப் பாடசாலைகளில் கூடுதலான ஆசிரியர்களை நியமிப்பதற்கு ஆவன செய்யவேண்டும்.

பல்வேறு. கஷ்டங்கள் மத்தியில் இரண்டரை வருடங்களாக சேவை அடிப்படையில் கற்பித்துவரும் கடல் வளத் தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கு போட்டிப் பரீட்சைப் புள்ளிகளுடன் சேவைக்காலத்தினையும் கருத்தில் கொண்டு நியமனம் வழங்கல் வேண்டும்.

மேற்கூறிய விடயங்களைக் கருத்தில் கொண்டு கடல் வளக் கல்வி யினை மேம்படுத்திக் கொள்வதற்கு இவ் ஆசிரிய நியமனங்களை வழங்க வேண்டும்.

ஆகிய 3 அம்சக் கோரிக்கைகள் உள்ளடக்கிய மகஜர்களை யாழ். அரச அதிபர் மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடம் நேற்று யாழ். செயலகத்தில் வைத்து நீர் உயிர்வள ஆசிரியர் சங்கம் கைய ளித்துள்ளது.

இவ்வாறு கையளிக்கப்பட்ட மகஜரில்,

யாழ். பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறியினை பூர்த்தி செய்து 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் வெளியேறியுள்ளனர். இவர்களில் 50 பேர் தற்காலிக சேவை அடிப்படையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 69 பாடசாலைகளில் பணியாற்றி வருகின்றனர்.

இதனையடுத்து 2003 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண பரீட்சையில் 700ற்கு மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து முதன் முதலாக கடல் உயிர்வள தொழில்நுட்ப பாடத்தில் தோற்றி சிறந்த பெறுபேற்றையும் பெற்றுள்ளனர்.

எனினும், வடக்கு கிழக்கின் ஏனைய பாடசாலைகளிலும் இப்பாடத்தினை கற்பதற்கு. மாணவர்கள் முன்வந்துள்ள போதிலும் அங்கு ஆசிரிய ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதால் கற்பித்தல் செயற்பாடுகளை விரிவாக்க முடியாதுள்ளது.

மேலும், எமது நியமனம் தொடர்பாக நிச்சமற்ற நிலை ஒன்று தொடர்வதால் எமது கற்பித்தல் பணிகள் ஸ்தம்பித நிலைக்குச் செல்லலாம். இதனால் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்படும் என அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதன் பிரதிகளை அரச அதிபர்கள் மேலதிக மாகாணக் கல்வி அமைச்சர்கள் செயலாளர் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் ஆகி யோரிடமும் நீர் உயிர்வள ஆசிரியர் சங்கம் கையளித்துள்ளது. (ப-19)

## மட்டு.மாவட்டத்தில் சோதனை அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லடிப் பாலம், ஏறாவூர் ஓட்டமாவடிப் பாலம் ஆகிய இடங்களில் பயணிகள் வாகனங்களை படையினர் கடுமையாகச் சோதனை செய்வதாகவும் துருவித் துருவி விசாரணை செய்வதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லும் நுழைவாயில்களான வவுணதீவுப்பாலம், செங்கலடி கறுத்தப்பாலம், அம்பிளாந்துறை ஆகிய இடங்களில் படையினரின் சோதனைக் கெடுபிடிகளால் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் பொது மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

(ற)

## சிறந்த சுகாதாரச் செய்திகளை எழுதும் பத்திரிகையாளர்கள் தெரிவு

(கொழும்பு)

சுகாதாரத் துறைசார்ந்த சிறந்த செய்திகளை வெளியிட்ட பத்திரிகை யாளரைத் தெரிவுசெய்து கௌரவிப்பதென இலங்கை மருத்துவ சங்கம் தீர்மானித்துள்ளது.

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் செய்திகளை எழுதும் முழுநேர பத்திரிகையாளரும் சுயாதீனப் செய்தியாளர்களும் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

கடந்த யூலை மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஒருவருட காலப் பகுதிக்குள் பத்திரிகைகளில் வெளியான அறிக்கைகளில் இருந்து சிறந்த கட்டுரை தெரிவு செய்யப்படவுள்ளது.

இதற்காக விண்ணப்பிக்க விரும்பு வோர் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் மருத்துவ சங்கத்திற்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற-7)

## இரண்டு ஆண்டுகாலப் பகுதியில் 142 பிக்குகள் சிறுநீரகத் தானம்

(கண்டி)

கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் 142 பௌத்த பிக்குகள் சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிச்சைகளுக்காகத் தமது சிறுநீரகங்களைத் தானம் செய்திருப்பதாக கண்டி பொது வைத்தியசாலை வைத்திய நிபுணர் திலக் அபயசேகர தெரிவித்துள்ளார்.

கண்டி வைத்தியசாலைக்கு விஜயம் செய்த மல்வத்தை பீடமகாநாயக்கர் அதி சங்கைக்குரிய சிப்பத்துவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரிடம் அவர் இத் தகவலை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சிறுநீரகக் கோளாறுகள் காரணமாக பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்துவருவதாகவும் அவ் வைத்திய நிபுணர் சுட்டிக்காட்டினார். (ற-07)

## சட்டவிரோதமாக இங்கிலாந்து செல்லமுயன்ற 31 பேர் கைது

சட்டவிரோதமாக இங்கிலாந்து செல்ல முயன்ற 31 பேரை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து நேற்று முன் தினம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இவர்களில் 26 பேர் தமிழ் இளைஞர்கள் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. இவர்கள் மாலைதீவிற்குச் செல்லவுள்ளதாகக் கூறி இங்கிலாந்து செல்ல முயற்சித்துள்ளனர்.

இவர்களிடமிருந்து போலி விமானப் பயணச்சீட்டுக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இங்கிலாந்து செல்வதற்கான விசா அனுமதிப் பத்திரங்கள் இவர்களிடம் இருந்த போதும் அதற்கான விமானப் பயணச் சீட்டுகள் போலி என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் தற்போது நடைபெற்று வருகின்றது. (ப-8)

## சுகாதார சேவையில் 5500 பேர் உள்ளீர்ப்பு

(கொழும்பு)

சுகாதாரத்துறை நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தி அபிவிருத்தி செய்யும் நோக்குடன் சுகாதாரத் துறைக்கென 5 ஆயிரத்து 500 பேர் புதிதாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இது தொடர்பாக சுகாதார அமைச்சு தகவல் அறிக்கையில் 5 ஆயிரம் தாதிமாரும் 500 இணைந்த சேவையினரும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் எனத் தெரிவித்துள்ளது.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் தகவலின்படி இந்தத் திட்டத்திற்கான நிதியை திறைச்சேரி ஏற்கனவே ஒதுக்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

முதற் கட்டமாக 2 ஆயிரம் தாதிமார் சேவையில் ஊள்ளீர்க்கப்பட்டு அவர்களுக்கு துரித பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் இணைந்த சேவையினருக்கான பயிற்சிகள் அடுத்த மாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

(ற-7)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ற)

# ஜே.வி.பியை விட்டுப் பிரிந்து சென்று, ஸ்ரீ.சு.கட்சி ஐ.தே.கவுடன் இணையும்

## முயற்சிகள் நடப்பதாகக் கூறுகிறார் ஜெகான் பெரேரா

(யாழ்ப்பாணம்)

அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியாது திண்டாடிக் கொண்டிருக்கும் நிலையில், பாராளுமன்றத்தில் பெரும்பான்மையையும் நிருபிக்க முடியாமல் உள்ளது.

ஒரு புறத்தில் இந்தப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் சமாதான நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் எற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த 40க்கு மேற்பட்ட தென்னிலங்கை ஊடகவியாளர்களுக்கு தலைமை தாங்கிய ஜெகான் பெரேரா தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் வட இலங்கைப் பத்திரிகை ஆசிரிய சங்கத் தலைவர் கதிர்காமத்தம்பி தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பிரச்சினைகளில் இருந்து அரசு விடுபடவேண்டுமென்பதற்காக ஐக்கிய தேசிய கட்சியுடன் சில உடன்பாடுகளுக்கு வரமுயற்சிசெய்து கொண்டிருக்கின்றது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு இடம்கொடுக்கவில்லை.

அண்மைக்கால போக்குகளில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி,ஜே.வி.பியை விட்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படவிரும்பும் மாற்றம் தெரிகிறது.

ஒரு கட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியும் அவர்களைக் கைவிட்டுவிடும் பெருமளவு மக்கள் ஜே.வி.பிக்கு ஆதரவு வழங்குகின்றனர்.

எனவே ஜே.வி.பியை சமாதான செயற்பாட்டுக்கு கொண்டு வர நாங்கள் முயல வேண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் சேர்ந்து சமா தானச் செயற்பாட்டை முன்னெடுத் தால் நல்ல தீர்வுகள் கிடைக்கும் இரு சாராருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படும்போது பிரச்சினைகளை நம் பிக்கையுடன் பேசினால் நல்ல தீர்வுகள் இடைக்கும் என நம்புகிறேன் எனக் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் சி.வீ.கே. சிவஞா னம் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சக்திவேல் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ற-5)

## கஷ்டப்பிரதேச ஆசிரியருக்கு மேலதிக விஷேட கொடுப்பனவு

கஷ்டப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு விஷேட கொடுப்பனவு வழங்கும் பிரேரணைக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இதன் அடிப்படையில், மிகவும் கஷ்டப் பிரதேசங்களில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு ஜனவரி மாதத்தில் இருந்து 2 ஆயிரத்து 500 ரூபாவை மேலதிகக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, ஓரளவு கஷ்டப்பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படவுள்ளது

இதற்கென 56 கோடி ரூபா நிதியை அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-7)

# அறிவித்தல்

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

லொயலா செல்வச்சீராளன்
இல. 41,மத்தியூஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

வழ. இல. மணநீக்கம்/277 — வழக்காளி

எதிராக

லொயலா செல்வச்சீராளன்
பெண் பிறின்சியா,
வயா அன்ரோனியா
வெளிசியானோ 110,
90100 பலர்மோ பா,
இத்தாலி.

எதிராளி

மேற் சொல்லப்பட்ட வழக்காளிக்கு,
(லொயலா செல்வச்சீராளன் 41, மத்தியூஸ்றோட், யாழ்ப்பாணம்)

எதிராளியின் சார்பில் சட்டததரணி ந. ரவிராஜ் அவர்கள் பதிலி அற்றோணித் தத்துவப்பத்திரம் ஆகியவற்றை நகர்த்தல் பத்திரத்துடன் அணைத்து இவ்வழக்கை 14.05.2004 ஆதரிப்பதற்காக மன்றில் கூப்பிடப்பட்டு மன்றின் அனுமதியுடன் எதிராளியின சட்டத்தரணியால் சமர்ப்பணம் செய்யப்பட்ட பின்னர், எதிராளித் தரப்பு சட்டத்தரணியின் சமர்ப்பணத்தை வழக்கேட்டுடன் பரிசீலித்து இவ்வழக்கல் 12.12.2002 ல் எதிராளி இவ்வழக்கில் மறுமொழ அணைக்காது எதிராளியும் சமுகம் இல்லாத காரணத்தினால 02.01.2003 ற்கு ஒருமுக விளக்கத்திற்காக திகதி இடப்பட்டு இருந்தும் அன்றைய தினம் வழக்காளியோ வழக்காளியின் பதிவு பெற்ற சட்டத்தரணியோ சமுகம் இல்லாததால் கட்டளை இல்லை எனக் குறிப்பிடப்பட்டதை வழக்கேட்டுடன் அவதானித்து 12.12.2002 ஒருமுக வளக்கத்திற்கு இடப்பட்ட கட்டளை வலுவிழந்துள்ளது என்பதை இட்டு மன்று திருப்திப்படுவதால் எதிராளித தரப்பில் கோரியதற்கு அமைய அறிவித்தலை தினக்குரல், வலம்புரி, உதயன், நமது ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தி பதில் சேவை செய்யும்படி 15.09.2004 ல் கட்டளை இட்டுள்ளபடியால்,

வழக்காளியாகிய நீர் ஏன் மேற்கூறியவற்றை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்பதற்குக் காரணம் காட்ட இருப்பின் 2004ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27ம் திகதி காலை 9.00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி தெரிவிக்குமாறு இத்தால் உமக்கு அறிவித்தல் தரப்படுகின்றது.

2004ம் ஆண்டு புரட்டாதி மாதம் 16 ம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி

து.சிறீமோகன்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

(8820)



க.பொ.த. (சா.த)
மாணவர்களே! வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள்
வெளிவருகின்றன.



விவாத அரங்கு -5

விடயம்
வீடியோப் படப்பிடிப்பு தமிழர்
கலாசாரத்தைப் பாதிக்கின்றது-
பாதுகாக்கின்றது-

நடுவர் : புத்தூர் சி.சிவநேசன்
(பிரபல சட்டத்தரணி)

உங்கள் வாதங்கள்ளை எழுதி அனுப்பி வையுங்கள

அனுப்பவேண்டிய முகவரி
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.


# யாழ். மாவட்டத்தின் கல்வி அபிவிருத்திக்கு இதுவரை 200 மில்லியன் ரூபா செலவு

## யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கோப்பாய்)

போராட்ட காலத்தில் இழந்த கல்வியை மறுமலர்ச்சி அடையச் செய்ய வேண்டிய தார்மிகக் கடமை அதிபர் ஆசிரியர்களிடம் மட்டுமன்றி பெற்றோரிடமே முழுமையாகவுள்ளது.

இன்றுவரை யாழ்.மாவட்டத்தின் கல்விச் செயற்பாட்டிற்கென இருநூறு மில்லியன் ரூபா வரையான செலவினை யாழ். செயலக மட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச் செலவின் உச்சப்பயனையும் உச்ச விளைவையும் எய்துவதன் மூலம் குறிக்கோளை நிறைவு செய்யவேண்டும் என அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் நிரந்தர அமைவிட மீள் புகுவிழாவில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். வலயக் கல் விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் இ. இராசசேகரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அவா தொடர்ந்தும் உரையாற்றுகையில், 12 மில்லியன் ரூபா செலவல் மாடிக்கட்டமும் , ஆரம்பக்கல்வி வகுப்பறைத் தொகுதியும் உருவாக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து இங்கு தேவைப்படுகின்ற வழங்களைப் பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுடையதே.

தரம்-2 பாடசாலைகளுக்கு காவலாளியை நியமிப்பதற்கான ஆளணிவளம் அரசாங்கத்தால் வழங்கப்படவில்லை. எனவே சூழற்சி முறையில் பெற்றோர்கள் நாளுக்கு ஒருவர் இரவு நேரக் காவலாளியாகக் கடமையாற்றும் போது பாடசாலை சொத்துக்களைப் பேணிப் பாதுகாக்க முடியும்.

படசாலைகளில் பல குறைபாடுகள் உள்ளன. ஆயினும் அவற்றை உடனடியாக நிறைவு செய்ய முடியாது போர்க்காலச் சூழ்நிலையில் மூடப்பட்டிருந்த இப்படசாலை, ஐந்து வருடங்களின் பின்பு இன்று மீள் புகுவிழாவைச் சந்தித்துள்ளது. தொடர்ந்தும் இப்பாடசாலையை கவின் கலையுடையதாக மாற்றுவதற்கும் பாடசாலைச் சமூகம் உறுதிபூண வேண்டும் எனக்குறிப்பிட்டார். (ந-79)

# 'பனைச் செல்வம்' நூல் வெளியீட்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ.பலகலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் மற்றும் தாலமூல வள நிறுவன இயக்குனர் வி. தீ. தங்கவேல் ஆகியோரின் 'பனைச் செலவம்' நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில இடமபெறவுள்ளது.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இடமபெறவுள்ள இந் நிகழ்வில நூல் அறிமுகவுரையை யாழ் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி. இளம்பருதியும் வெளியீட்டுரையை தமிழீழ பெருண் மியமேம்பாட்டு பொறுப்பாளர் சி. கரிகாலனும் மதிப்பீட்டுரையை கலாநிதி திருமதி சிவமதி சிவச்சந்திரனும் வழங்கவுள்ளனர்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ. சேனாதிராசா, கி. சிவநேசன் மற்றும் விவசாயப் படாதிபதி பேராசிரியர் சு. இராசதுரை மேலதிக அரசாங்க அதிபா ஆ. சிவசுவாமி, கூட்டறவு உதவி ஆக்க ஆணையாளர் க. ஐயாத்துரை, பனை அபிவிருத்திச் சபையின் முன்னாள் இயக்குனர் கோ. சி.வேலாயுதம் , லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கவுள்ளனர். நூலின் முதற்பிரதியை வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி. தவராசா பெற் றுக்கொள்வார். (ற)

## நிதி ஒதுக்குமாறு கோரிக்கை

(மருதங்கேணி)

மருதங்கேணி கோட்டத்திலுள்ள பாடசாலைகளின் பௌதீக வளங்களைப் பூர்த்தி செய்வதற்குரிய நிதியை பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துதருமாறு யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரனிடம் மருதங்கேணி கோட்டப்பாடசாலைகளின அதிபாகள் கடிதமூலம் கேட்டுள்ளனர்.

பாடசாலைகளுக்குத் தேவையான விளையாட்டு மைதானம், கணனிகள், நூல் நிலையங்கள், புத்தகங்கள், தளபாடங்கள், தட்டச்சு இயந்திரங்கள் மற்றும் போட்டே பிரதி இயந்திரங்கள் போன்றவற்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக் குமாறும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-35)

## அதிபர் நியமனம்

(சாவகச்சேரி)

மசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் அதிபராக கு. கதிர்காமசேகரம் ஆறுமாத காலத்திற்கு பணியாற்ற நியமிக்கப்பட்டுள்ளார்.

பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேறபடி தீர்மானம் எடுக்கபட்டது.

தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் யாழ். மாவட்டக் கல்வி கழகப்பொறுப்பாளர் அருண் மாஸ்டர்,தென்மராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆர்வலன் மற்றும் தென்மராட்சி அரசியல் துறைப்பபொறுப்பாளர் கலைவாணன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-29)

## பேருந்துச் சேவை நிறுத்தப்பட்டது

(கல்வயல்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குரிய பருத்தித்துறை போக்குவரத்து நிலையத்தால் நடாத்தப்படும் 765ஆம இலக்க பருத்தித்துறை- சாவகச்சேரி பேருந்து சேவை தற்போது நடாத்தப்படாது நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் அரச ஊழியர், வர்த்தகாகள், மாணவர்கள் என பல தரப்பட்ட மக்களும் பெரிதும் பாதிப்படைந்து உள்ளனா். (க-36)

## நிதியுதவி

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள அதிநவீன மருத்துவமனைக்கான கட்டட நிர்மாணப் பணிகளுக்கு 10 இலட்சம் ரூபா நிதி உதவியை வழங்க ஜப்பானின் "ஜெய்க்கா" நிறுவனம் முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான உடன்படிக்கை கடந்த வாரம் சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கும், ஜெய்க்கா நிறுவனப் பிரதிநிதிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (க)

## வீதி சேதம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு இறுப்பிட்டி வீதி 35 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாது சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இவ வீதியானது இறுப்பிட்டி-நயினாதீவு படகு சேவை இடம் பெற்ற காலப் பகுதியில் திருத்தப்பட்டதற்குப்பின்னர் இது வரை திருத்தப்படாது குன்றும் குழியுமான நிலையிலேயே காணப்படுகின்றது.

இது விடயம் குறித்து சம்பந்தப்பட்ட பல தரப்பினருக்கும் தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவிதமான பலனும் கிடைக்காத நிலையில் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.(க-126)

## பாலம் சேதம்

(துன்னாலை)

கொடிகாமம் பருத்தித்துறை பிரதான வீதியில் உள்ள குடவத்தைப் பாலம் கடந்த 10 மாதங்களுக்கு மேலாக சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனால் இப் பாதையினூடு செல்லும் பேருந்துகள் மற்றும் தனியார் வாகனங்கள் பலத்த இன்னல்களை சந்திக்க நேரிடுகின்றது. (ப-101)

## கூட்டம்

(துன்னாலை)

துன்னாலை ஆயில் நின்றொல்லை விநாயகர் ஆலய விசேட மகாசபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க-101)

## 'இது எங்கள் தேசம்' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ச.முருகானநதனின் 'இது எங்கள் தேசம்' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு, வெள்ளவத்தையில் உள்ள சங்கரப்பிள்ளை மண்டபத்தில் தேசிய கல்வி நிறுவன முன்னாள் உதவிப் பணிப்பாளர் கு.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா சிறப்பு அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார். (க)

## புனரமைப்பு

(சாவகச்சேரி)

மடடுவில் தெற்கு சோமஸ்கந்தா பாடசாலை 45 லட்சம் ரூபா நிதி செலவில் ஜி.ரி.சற் நிறுவனத்தினால் புனரமைக்கப்படவுள்ளது. (க-127)

## கலந்துரையாடல்

(கற்கோவளம்)

வல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவகால சேவையில் ஈடுபடுவது குறித்த இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைப பிரிவுத் தொண்டர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10.00 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தலைவர் சூ.தவராசா தலைமையில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் பல முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளன. (ப-104)

## மின் கட்டணம் செலுத்த முடியாத நிலை

(துன்னாலை)

கரவெட்டி தபாலகத்தில் மின் கட்டணம் செலுத்தச் செல்வோா பற்றுச் சிட்டை முடிவடைந்ததால திருப்பி அனுப்பப்படுகின்றனர் .

இதனால் பணம் இருந்தும் செலுத்த முடியாத நிலையில் மின் பாவனையாளர்கள் பெரும் விசனமடைகின்றனர். (க-101)

## இன்று ஒரு தகவல்

# பந்திக்கு முந்து

எனக்குத் தெரிந்த ஒருவர் பலகல்யாண மண்டபங்களில் அவரைப் பார்த்திருக்கிறேன். சாப்பாடடுப் பந்தியில் முதல் ஆளாக அமர்ந்திருப்பார். ஏன் அப்படி என்று கேட்டால் பந்திக்கு முந்து என்று நமது பெரியவர்களே சொல்லி வைத்திருக்கிறார்களே அது உனக்குத் தெரியாதா? என்பார். அதன் பின்பு தான் நானே அதைப்பற்றி யோசித்துப் பார்த்தேன்.

"பந்திக்கு முந்து படைக்குப் பிந்து" என்று உண்மையிலேயே அந்த அர்த்தத்தில் தான் பெரியவர் சொல்லியிருப்பார்களா? விபரம் தெரிநதவர்களைக் கேட்டுப் பார்த்தேன. அது அப்படி இல்லையாம் அவர்கள் இதற்குக் கொடுக்கும் விளக்கம் என்ன தெரியுமா?

அந்தக் காலத்தில் ராஜாக்கள் எல்லோரும் நான்கு வகையான படை வைத்திருப்பார்களாம். யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை என்ற இந்த நாற்பெரும் படையும் உள்ள மன்னன் தான் சிறந்த மன்னன்.

ஒரு ராஜா சண்டைக்குப் போகிறார் என்று வைததுக்கொள்ளுங்கள். இந்த நான்கு வகையான படைகளும் அணிவகுத்துப் போகும. முதலில் யானைப்படை போகும். அதற்கு அடுத்ததாக குதிரைப்படை போகும் அடுத்தது தேர்ப்படை அடுத்தாக காலாட்படை இந்த வரிசையில் தான் போகும புறநானூறில் வரும் பாடல்களிலேயே அது இந்த வரிசைப் படிதான் வரும்.

**"கடுஞ்சினத்த கொல்களிறும்**
**கதழ்பரிய கலிமாவும்**
**நெடுங்கொடிய நிமிர் தேரும்**
**நெஞ்சுடைய புகழ் மறவரும"** (புறம்55)
**"படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்**
**நெடுநல் யானையும் தேரும் மாவும்**
**படையமை மறவரும"** (புறம் 72) என்று இன்னுமோர் பாடலில் வரும்.

எப்படிப் பார்த்தாலும் முதலில் வருவது யானைபடை நான்காவதாக வருவது தரைப்படை அதாவது காலாட்படை அந்தக் காலத்தில் போர்ப் பயிற்சி பெற்ற எல்லோரையும் படையில் வைத்திருப்பதில்லை. தேவைக்கு அதிகமாக உள்ளவர்களையெல்லாம் பயிற்சி கொடுத்து வீடடிற்கு அனுப்பிவைத்துவிடுவார்கள். அவர்கள் வட்டிற்குப்போய் அவர்களுக்குரிய தொழிலைச் செய்துகொண்டிருப்பார்கள்.

பகைவர்கள் படையெடுத்து வருகின்றார்கள். போர் ஆரம்பமாகப் போகின்றது என்று தெரிந்தால் அதற்கு அறிகுறியாக போர்ப்பறை முழங்கும் . முரசுச் சத்தம் கேட்கும். இந்தச் சத்தம் கேட்டதும் வீட் டில் இருக்கும வீரர்கள் எல்லோரும் கையில் கிடைத்த ஆயுதங்களை எடுத்துக் கொண்டு நாட்டைக் காப்பாற்றுவதற்காக ஓடிவருவார்கள்.

அப்படிப் நிற்கும் போது அந்தக் காலாட்படையில் முதலில் நிற்பதற்கு ஆசைப்படுவார்கள். அதாவது பந்திக்கு முந்துவார்கள் பந்தி என்றால் வரிசை என்று அர்த்தம். அந்த வரிசைக்கு முந்து என்று தான் அர்த்தம் . அதனால் பந்திககு முந்து என்றால் படைவீரர் கள் வரிசையில் முன்னால் போய் நில் என்று அர்த்தம்.

படைக்கு பிந்து யானை,குதிரை தேர் இந்த படை அணி வகுப்பில் கடைசியாக இருக்கும் காலாட படையில் போய் நில் என்று அர்த்தம். இதை அனர்த்தம் செய்து கொண்டு நாம் இப்போதெல்லாம் சாப்பாட்டுப் பந்தியில் முண்டியடித்துக்கொண்டு கிடக்கிறோம்.


நமது ஆள் ஒருவர் விடயத்தில் நல்ல தேர்ச்சி பெற்ற நிபுணர்.ஒரு கல்யாணப் பந்தியில் எனக்குப பக்கத்தில் அவர் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார் தற்செயலாக நான் திரும்பி அவரைப் பார்த்தேன். அவர் அழுது கொண்டிருந்தாா. நான் பதறிப்போய் "ஏன் சார் அழுகிறீர்கள்?" என்று கேட்டேன் இது அழுகையில்லை சார் ஆனந்தக் கண்ணீர் என்றார்.

" என்ன விடயம்?" என்று விசாரித்தேன். அவர் சொன்னார் "சார்...நானும் எனது வாழ்க்கையில் எத்தனையோ கல்யாண வீடுகளுக்குப் போயிருக்கிறேன். சாப்பிட்டிருக்கிறேன் ஆனால் இன்று தான் சாம்பாருக்குத் தனியாகவும் ரசத்திற்குத் தனியாகவும் அப்பளம் போடுவதைப் பார்த்தேன். இரண்டு அப்பளத்தை ஒன்றாகப் பார்ததும் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டு விட்டேன் சார் அவ்வளவுதான் என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஐ.ம.சு.முன்னணியினுள் முறுகல் நிலையே பேச்சுக்கள் மீள ஆரம்பிப்பதற்கு தடை

## ஜி.எல். பீரிஸ் குற்றச்சாட்டு



(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாகக்கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தமக்கிடையே ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து விரைவில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி வலியுறுத்தியுள்ளது.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு தெரிவிக்கையில்,

டோக்கியோ,ஒஸ்லோவில் இடம்பெற்ற பேச்சுக்களின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் இடைக்கால நிர்வாகசபை அமையுமானால் எமது கட்சி அதற்கு எதிர்ப்புத்தெரிவிக்காது.

மக்கள் விடுதலைமுன்னணி எதிர்த்தாலும், இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் கூறுகின்றது.

ஆனால் மக்கள் விடுதலை முன்னணியினர் இடைக்கால நிர்வாக சபை கோரிக்கைக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்து வரும் அதேவேளை, தமது நிலைப்பாட்டில் எதுவித மாற்றமுமில்லை' எனவும் தெரிவிக்கின்றனர்.

விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டுக்கும் எமது கட்சியின் நிலைப்பாட்டுக்குமிடையே முரண்பாடுகள் இருக்கின்றன.

எனினும், பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அடிப்படையாக புலிகளின் யோசனைகளை ஏற்றுக்கொள்ள நாம் தயார் என கடந்த வருடம் தெளிவாகக் கூறியிருந்தோம்.

தற்போதைய நிலையில் மக்கள் சுமக்க முடியாத அளவுக்கு பாரிய சுமையாக வாழ்க்கைச் செலவு அதிகரிக்கின்றமை, தேர்தல் காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படாமை போன்றவற்றுக்கு எதிராக விரைவில் பாரிய ஆர்ப் பாட்டம் ஒன்றை நடாத்தவுள்ளோம் எனவும் குறிப்பிட்டார். (ம-8)

# மருத்துவ பீட மாணவி புஷ்பமாலாவின் பெறுபேறுகளில் மாற்றம் எதுவுமில்லை

## துணைவேந்தர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

1995-1996ஆம் கல்வி ஆண்டில் மருத்துவ பீட மாணவியாக பதிவுசெய்துகொண்ட கி. புஷ்பமாலா 2003ஆம் ஆண்டு நடைபெற்ற 2ஆம் காலாண்டு எம்.பி.பி.எஸ் பரீட்சையில் மூன்று பாடங்களிலும் சித்தியடையவில்லை என துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே அவர் தான் பல்கலைக் கழகத்தால் பழிவாங்கப்பட்டதாகக்கூறி உண்ணாவிரதம் இருந்ததாக அவர் தெரிவித்தார்.

மருத்துவபீட மாணவியின் கோரிக்கையை ஏற்றுககொண்டதன் படி பல்கலைக்கழக நிர்வாகம் அவரது பரீட்சை விடைத்தாள்களை கொழும்புக்கு அனுப்பியது. அதன் படி பரீட்சை விடைத்தாள்கள் திருத்தப்படடு பெறுபேறுகள் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. முன்னைய பெறுபேறுகளிற்கும் தற்போது வெளியாகியுள்ள பெறுபேறுகளுக்கும் எந்தவித மாற்றமுமில்லை.

இப்பேறுபெறுகள் குறித்த முடிவு நேற்று முன்தினம பதிவுத்தபால் மூலம் புஷ்பமாலாவின் வீட்டிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புஷ்பமாலா இரண்டாம் காலாண்டு எம்.பி.பி.எஸ். பரீட்சைக்கு விண்ணப்பிப்பதன் மூலம மாணவிக்குரிய தகுதி நிலையைப பெற்றுக்கொள்ள முடியும். இதனைக் கருத்தில் கொண்டு மாணவி புஷ்பமாலா பல்கலைக்கழகத்தை விட்டுவெளியேறுமாறும், இக்கோரிக்கையை ஏற்று வெளியேறாத சந்தாப்பத்தில் நிர்வாகத்தின் சார்பில் அவரை வெளியேற்றும் நடவடிக்கையை எடுப்பதற்கு தான் நிர்ப்பந்திக்கப்படுவேன் எனவும் துணைவேந்தர் மேலும் கூறினார். (ச)

## இராசி பலன்

**18.09.2004 (புரட்டாதி 02 சனிக்கிழமை)**
**சதுர்த்தி பி.ப. 4.58 மணிவரை**
**சுவாதி மாலை 5.44 மணிவரை**
**இராகு காலம் 09.03-10.33 மணிவரை**
**சுப நேரம் 3.03 - 4.33 மணிவரை**
**சதுர்த்தி விரதம், புரட்டாதிச் சனி**

**மேடம்**
களஸ்திர நன்மை, காரிய அனுகூலம், தெய்வசிந்தை, போசன நன்மை.

**இடபம்**
ஆரோக்கிய நிலை, உறவினர் சந்திப்பு, தொழில் சிந்தை, முயற்சி கைகூடும்.

**மிதுனம்**
புத்திரரால் கவலை, உடல்நலக் குறைவு, காரிய தாமதம், வியாபாரச் சிந்தை.

**கடகம்**
தாய்வழி உறவு, மனச் சோர்வு, நல்ல பிரயாசை, இடமாற்றம்.

**சிங்கம்**
சகோதரர் உதவி, சுவாரஸ்யம், காரிய சித்தி, பணவருவாய்.

**கன்னி**
தொழில் சிந்தை, பணவிரயம், குடும்பக் கவலை, தெய்வ சிந்தை.

**துலாம்**
தெய்வ தரிசனம், உறவினர் உதவி, புதிய முயற்சி, காரிய சித்தி.

**விருச்சிகம்**
பிரயாணம், தனவிரயம், எதிர்பாராத நன்மை, 'அமைதிக் குறைவு.

**தனுசு**
மன மகிழ்ச்சி, தெய்வ தரிசனம், புகழ், முயற்சி பலிதம்.

**மகரம்**
அதிக பிரயாசை, விருந்துபசாரம், பிதா சிந்தை, புதிய முயற்சி.

**கும்பம்**
புதிய திட்டமிடல், உடல் நலக் குறைவு, பிரயாணம், முயற்சி தாமதம்.

**மீனம்**
திருடர் பயம், காரிய தாமதம், திடீர் நன்மை, வீண் பகை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது) வளவன்

# சுகாதார சேவை ஊழியர்கள் சத்தியாக்கிரகப் போராட்டம்

(கொழும்பு)

சுகாதார அமைச்சு முன்பாக சுகாதார சேவை ஊழியர்கள் நேற்று முன்தினம் சத்தியாக்கிரகப் போராட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

சுகாதார சேவை ஊழியர்களுக்கான சம்பளம் அதிகரிக்கப்படாமை மற்றும் சுகாதார சேவைப்பிரிவுகள் சிலவற்றைத் தனியார் மயப்படுத்தல் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத்தெரிவித்தே சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் தொடர்பாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவிக்கையில், சுகாதாரசேவைத் தொழிற்சங்கக் கூட்டமைப்பு முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை.

அத்துடன் சுகாதாரசேவைகளின் சில பிரிவுகள் தனியார் மயமாக்கப்படுவதாகக் குற்றம்சாட்டப்படுகின்றது. ஆனால் தொழிற்சங்கங்களே சுகாதார அமைச்சை இந் நிலைக்குத்தள்ளியுள்ளன.

சுகாதார சேவையாளர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பாக திஸ்ஸ தெய்வேந்திர ஆணைக்குழுவிற்கு ஏற்கனவே யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-8)

# யாழ்.வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில்
# சகல தரத்தினருக்கும் வேலைவாய்ப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வணிகர் கழகத்தினால் தொழில் வழங்கல் மையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

வேலைவாய்ப்பற்றிருப்போரின் மேம்பாட்டினையும் எதிர்காலத்தை யும் கவனத்தில் கொண்டு ஆரம்பிக் கப்பட்டுள்ள இத் தொழில் வழங்கல் மையத்தினால் 9ற்கும் மேற்பட்ட தொழில் வகைகளுக்கு விண்ணப் பங்கள் கோரப்பட்டுளளதென யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

அந்தவகையில் கணக்காளர் அலுவலக லிகிதர் சிட்டை எழுது நர், கணனி இயக்குநர், விற்பனை யாளர், அலுவலக உதவியாளர், விநியோகப் பணியாளர், சாரதிகள், கூலியாட்கள் உட்பட்ட தொழில் வகைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

18வயதிற்கு மேற்பட்ட சகல ரும் பொருத்தமானதெனக் கருதும் தகமைகளுடன் தாம் விரும்பும் பதவிகளுக்கு எதிர்வரும் 20ஆம் திகதிக்குப் பின்னர் விண்ணப்பிக்க லாம் என வணிகர் கழகம் அறிவித் துள்ளது.

தனியார் துறைகளில் நிலவும் வெற்றிடங்களுக்குத் தகுதி அடிப் படையில் விண்ணப்பதாரிகளுக் குத் தொழில் வாய்ப்புப் பெற்றுக் கொடுக்கப்படும்.

இதேவேளை, பதவி வெற்றி டங்களை தம்வசம் வைத்துள்ள தொழில் வழங்குநர்களும் யாழ். வணிகர் கழகத்திடம் விண்ணப்பித் தால் அவர்களுக்குத் தேவையான தகுதியுள்ள பணியாட்களை சிபார் சுடன் வழங்கவும் யாழ்.வணிகர் கழ கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக விண்ணப்பிக்க விரும் பும் தொழில் வழங்குநர்கள் எதிர் வரும் முதலாம் திகதியிலிருந்து யாழ்வணிகர் கழகத்திடம் விண்ணப் பங்களைச் சமர்ப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கல்வித்தகமை கள இல்லாது துறைசார் தேர்வை யும், நிபுணத்துவமும் உள்ளோ ரும் தாம் விரும்பும் பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். (ப)

# யூனியன் கல்லூரியில் ஆசிரியர் பற்றாக்குறை

உயர் பாதுகாப்பு வலயத்துக் குள் 2002ஆம் ஆண்டு முதல் உள் ளடக்கப்பட்டுள்ள தெல்லிப்பழை யூனி யன் கல்லூரி இருவருடங்களாக சொல்லொணாத் துயரை அனுபவித்து வருகின்றது என்றும் அங்கு போதி யளவு ஆசிரிய ஆளணி வசதியின்றி இக்கல்லூரி மாணவர்கள் மிகவும் வேதனை அடைகின்றார்கள் எனவும தெரிவிக்கப்படுகிறது. 48ஆசிரியர் கள் கற்பிக்கலாம் என்று கல்வி அமைச்சின் சுற்றுநிருபம் கூறுகின்ற போதும் இக்கல்லூரியில் 29ஆசிரி யர்கள் மட்டுமே கற்பிக்கின்றனர்.

இதனால் கல்லூரி நிர்வாகம் ஏழு ஆசிரியர்களை தொண்டர் ஆசிரியர் களாக நியமித்து மாணவர்களின் தேவையை ஓரளவு பூர்த்தி செய்துவ ருகிறது.

விஞ்ஞானம், கணிதம், ஆங் கிலம் போன்ற முக்கிய பாடங் களுக்கும் ஆசிரியர் பற்றாக்குறை அதிக அளவில் உள்ளது.

எனவே, பொருத்தமான ஆசிரியர் களையும் போதுமான ஆசிரியர்க ளையும் இக்கல்லூரிக்கு வழங்க வேண் டியது கல்வித் திணைக்களததினதும், மாகாணக் கல்வி அமைச்சினதும் தலையாய பொறுப்பாகும் இப பொறுப பிலிருந்து விலகிவிடாமல் இக் கல் லூரி மாணவர்களுக்குரிய ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவது கல்வித் திணைக்களத தினதும், மாகாணக் கல்வி அமைச்சினதும் கடடையாகும் என பாடசாலை அபிவிருத்திச்சங் கம் சுட்டிக்காட்டியுள்ளது. (க)

# தொலைந்த பொருட்களை கண்டுபிடிக்க நவீன வசதி

(கொழும்பு)

மொயற்றல் நிறுவனம் பொலிஸ திணைக்களத்துடன் இணைந்து தொலைக்கப்பட்ட பொருட்களை மீளக் கண்டுபிடித்து உரியவர்களிடம் ஒப்படைக் கும் சேவையை ஆரம்பித்துளளது.

கொழும்பு, ரொறிங்டன் கிரி மினல் பகுதியின் பதிவுகள் நிலை யத்தில், பொலிஸ் திணைக்களப் பிரிவாக இது செயற்படவுள்ளது. கணனி மயப்படுத்தப்பட்ட தரவுத் தளத்துடன் மிகவும் நவீன வசதி கள் அடங்கியதாக இது செயற் படும். மொயற்றல் நிறுவனம் இதற் கென 4.5மில்லியன் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

பெறுமதி வாய்ந்த உடமைகளைத் தொலைத்தவாகள் நேரடியாக இப் பிரிவுடன் அல்லது தத்தமது பகு திகளிலுள்ள பொலிஸ்நிலையங கலுடனோ தொடர்புகொண்டு இழக் கப்பட்ட உடமைகளின் விபரங்களைத் தெரிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இப்பிரிவு இந்த விபரங்களை இலங்கையின் சகல பொலிஸ் நிலை யங்களுக்கும் அறிவித்து விடுவது டன், இது தொடர்பாக எடுககப்படும் நடவடிக்கைகளையும் உடனுக் குடன் முறைப்பாடு செய்தவருக்கும தெரியப்படுத்தும்.

பொருட்கள் கண்டுபிடிக்கப்பட் டதும முறைப்பாடு செய்தவர் அவற் றைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்படும். ஏதேனும் பொருட்களை வீதிகள் மற்றும் பொது இடங்களில் காண்பவர்களும் இப் பிரிவிற்கு அது பற்றிய தகவல் களை வழங்கமுடியும்.

இதற்கான தொலைபேசி இலக் கம் 071-2299777 எனவும் இரவு நேரங்களில் 2696545எனும் தொலை பேசி இலக்கத்தினூடு தெரியப்ப டுத்தலாம் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ற-6)

# ஒரேநாளில் அடையாள அட்டை
# மோசடி குறைவு என்கிறார் ஆணையாளர்

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டை யைப் பெறுவதற்காக விண்ணப் பிக்கும்போது சமர்ப்பிக்கப்பட்டு வந்த போலி ஆவணங்களின் எண் ணிக்கையைக் குறைக்க முடிந்தி ருப்பதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் பி.வி.அபயக்கோன் தெரிவித்துள்ளாா.

ஒரேநாளில் தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கும் நட வடிக்கைகளின் போது முன்னர் இடம்பெற்றுவந்த மோசடிகள் தொட ராமலிருக்க உரிய நடவடிக்கை கள் எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, தேசிய அடை யாள அடடைக்கான விண்ணப்பங் களுடன சமர்பபிக்கப்படுகின்ற ஆவ ணங்கள் திணைக்கள அதிகாரிக ளுககுப் புறம்பாக பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளின் பரிசீலனைக்குச சமர்பபிக்கும் நடவடிக்கைகள் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும்போது பிறப்புச சான்றிதழின் மூல ஆவணம் சமர்ப் பிக்கப்படுவது அத்தியாவசியமாக் கப்பட்டுள்ளது. பிறப்புச் சான்றி தழ் இல்லாதவர்கள் சத்தியக்கட தாசி மூலம் உறுதிப்படுததினால் அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியுமென்று ஆணை யாளர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, விவாகப் பதிவுச் சான்றிதழ், பிள்ளை ஒருவரின் விவாகச் சான்றிதழ் மற்றும் பாட சாலை விடுப்புப் பத்திரம் போன்ற வற்றையும் அடையாள அடடை யைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்படு கிறது. (ற-8)

# நாத்தாண்டிய பிரதேசசபை கலைக்கப்பட்டது

(புத்தளம்)

நாத்தாண்டிய பிரதேசசபை யினை வடமேல் மாகாண முதல மைச்சர் கடந்த புதன்கிழமை கலைத் துள்ளார்.

நாத்தாண்டிய பிரதேசசபை யின் நிர்வாகத்தில் ஊழல் மோச டிகள் இடம்பெற்றுள்ளதாக முத லமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து, கடந்த புதன் கிழமை நள்ளிரவு 12மணியிலி ருந்து அமுலுக்கு வரும் வகை யில், இப்பிரதேசசபை கலைக்கப் பட்டது.

பிரதேச சபையின் செயற்பாடு களை முதலமைச்சர் விசேட ஆணை யாளரின் கீழ் கொண்டுவந்துள்ளார்.

அதேவேளை நாத்தாண்டிய பிரதேசசபையின் அதிகாரம் சுயேச சைக் குழுவொன்றின் கீழ் இருந்து வந்தது. இம்மாதம் ஆரம்பத்தில் இப்பிரதேச சபையில் அங்கம் வகித்து வந்த 9 பொதுசன ஐக் கிய முன்னணி உறுப்பினர்கள் இச்சபை உறுப்புரிமையிலிருந்து தாங்கள் விலகிக் கொள்வதற் கான இராஜினாமாக் கடிதத்தை முதலமைச்சர் அத்துல விஜய சிங்கவுக்கு அனுப்பிவைத்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (து-15)

# பேச்சை ஆரம்பிக்கும் சாதகமான நிலையில் ஜனாதிபதி இல்லை
## ஜனாதிபதி செயலகம் அறிக்கை

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தை களை மீள ஆரம்பிக்கக் கூடிய சாத கமான நிலைப்பாட்டில் ஜனாதி பதி இல்லை என்பதை ஜனாதி பதி செயலகம் நேற்று முன்தினம் மாலை விடுத்துள்ள அறிக்கை சுட்டிக்காட்டுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

நேற்று முன்தினம் காலை கிளிநொச்சி சென்றிருந்த நோர்வே யின் விசேட பிரதிநிதி எரிக்சொல் ஹெய்ம் தலைமையிலான குழு வினர் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல் வனைச் சந்தித்துக் கலந்துரையா டிய பின்னர் கொழும்பு திரும்பி உடனடியாக ஜனாதிபதியைச் சந்தித்தனர்.

ஜனாதிபதி மாளிகையில் ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்கவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின் னர், ஜனாதிபதி செயலகத்தால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

நோர்வேயின் சமாதான முயற் சிக்கு வரவேற்பு எனும் தலைப் பில் வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ள கருத்துக்கள், அரசு மீதான நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்து வதாக உள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

சமாதானப் பேச்சுவார்த்தை மீண் டும் ஆரம்பிப்பதற்கு ஸ்ரீலங்கா அரசு வழங்கி கொடுத்த போதும விடுதலைப் புலிகள் அத்தகைய நிலைப்பாட்டில் இல்லை. கடும் போக்கை அவர்கள் கடைப்பிடித்து வருவதால் பேச்சுக்களை மீள ஆரம் பிக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ள தாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

அத்துடன், போர்நிறுத்தத்தை தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கும் பூரண ஆதரவு வழங்கப்படுவதாக வும் விடுதலைப்புலிகளுடன் சமா தானப் பேச்சுவார்த்தையை ஆரம் பிப்பதற்கு ஆர்வமாய் இருப்பதாகவும் அவ் அறிக்கையில் மேலும் குறிப் பிடப்பட்டுள்ளது. (ற)

# இலங்கைக்கு நிதியுதவி வழங்க ஜேர்மன் அரசு முன்வந்துள்ளது

(கொழும்பு)

ஜேர்மன் அரசாங்கம் 75மில் லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்க முன்வந் துள்ளது.

நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம அண்மையில் ஜேர் மனுக்கு விஜயம் செய்த போது ஜேர்மன் நிதிஅமைச்சரையும் சந் தித்து கலந்துரையாடியிருந்தார்.

இக் கலந்துரையாடலின் போது ஜேர்மன் அரசு 75மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை இலங்கைக்கு வழங்கும் என அந் நாட்டு உயர் அரச அதிகாரிகள் தெரிவித்திருந்தார்கள்.

இதேவேளை, நிதிஅமைச்சா சரத் அமுனுகம ஜேர்மன் விஜ யத்தை முடித்துக்கொண்டு ஆஸ் திரியாவுக்குச் சென்றார். அங்கு 'ஒபெக' அமைப்பின் உயர் அதிகாரி களைச் சந்தித்துக் கலந்துரை யாடியிருந்தார்.

இக் கலந்துரையாடலில் இலங் கைக்கு எண்ணெயை இறக்கு மதி செய்ய கடன்சலுகை வழங் கப்படும் என ஒபெக் அமைப்பு உறுதியளித்ததாகவும் தெரிவிக் கப்படுகின்றது. (க-61)

# சேது சமுத்திரத் திட்டம் குறித்து அமைச்சரவை உபகுழு ஆராயும்

(கொழும்பு

இந்திய மத்திய அரசினால் தென்னிந்தியாவில் அமைக்கப் படவிருக்கும் சேது சமுத்திரத் திட் டத்தினால் இலங்கை எதிர்கொள்ள இருக்கும் பிரச்சினைகள் தொடர் பாக ஆராய்ந்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதற்கென அமைச்சரவை உப குழு ஒன்றை நியமிக்க அமைச் சரவை தீர்மானித்துள்ளது.

சேது சமுத்திரத் திட்டத்தினால இலங்கையில் நீண்டகாலமாகப் பிரச்சினைகள் எழுந்த வந்துள்ளன.

வெளிவிவகார அமைச்சர் லக் ஷமன் கதிர்காமர் அமைச்சரவைக்கு சமர்ப்பித்த யோசனைக்கு அமை யவே இதற்கென அமைச்சரவை உப குழுவொன்றை அமைக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இத் திட்டத்தினால் இந்திய உபகண்டத்தின் தென் முனை கடற்பரப்பிலும் பல பிரச்சி னைகள் எழுந்துள்ளதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது. (ற-8)





தியாகி லெப்.கேணல் திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவு தினத்தை யொட்டி யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபையின் பணியாளர்கள் சபைக்குச் சொந்தமான காணியை சிரமதானம் மூலம் நேற்று முன்தினம் துப்புரவு செய் தனர். இதில் கலந்துகொண்ட கூட்டுறவு [illegible] சபைத் தலைவர் பெ.கனகசபாபதி மற்றும் செயலாளர் பொ.சண்முகசுந்தரம் ஆகியோடன் பணியாளர்களைப் படங்களில் காணலாம்.

# உண்மைநிலையை தெளிவுபடுத்தி பல அமைப்புக்கள் நோர்வேத் தூதுவரிடம் மகஜர்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டின் பலதரப்பட்ட நிலைமைகள் குறித்தும் ஆராய்வதற்காக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த நோர்வேயின் விஷேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்மிடம் பல்வேறு அமைப்புக்களும் தத்தமது கோரிக்கைகளை வலியுறுத்தி மகஜர்களைக் கையளித்திருந்தன.**

இதற்கமைய, யாழ்மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம், யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவு சங்கங்களின் சமாசம், கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம், வட மாகாண அதிபர் சங்கம், கல்வி மேம்பாட்டுப் பேரவை மற்றும் இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவக மாணவர் ஒன்றியம், யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை என்பன கையளித்துள்ள மகஜர்களின் விபரம் வருமாறு:-

## யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம்

தமிழ் மாணவர்களின் ஒருமித்த சக்தியாகத் திகழ்கின்ற தமிழ் மாணவர் ஒன்றியத்தினராகிய நாங்கள் வடக்கு-கிழக்கில் இன்னல்களுக்கு மத்தியிலும், இயல்பு வாழ்க்கையினை இழந்த நிலையிலும் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்ற மாணவர்கள் சார்பாக, மக்கள் மீதும், மாணவர்கள் மீதும் அதிக அக்கறை கொண்டவர் என்ற ரீதியில் இம் மடலினை வரைகின்றோம்.

போரின் ஆறாத வடுக்களைச் சுமந்து இன்னமும் அவல வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் தமிழ் மக்கள். சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டு அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் முகாம்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் தொடர்ந்தும் அல்லலுற்றுக் கொண்டிருக்கின்றார்கள். வட - கிழக்கில் வாழுகின்ற எத்தனையோ மாணவர்கள் கல்விக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றார்கள். வறுமையெனும் போர்வையில் வாழ்கின்ற மாணவர்களுக்கு இலங்கை அரசாங்கம் எந்தவிதமான தீர்வு நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை.

மாணவர்களாகிய நாங்கள் பல்வேறு சந்தர்ப்பத்தில் அரசாங்கத்திற்கும், சர்வதேசத்திற்கும் மாணவர்களின் அடிப்படை உரிமைகளைப் பெற்றுத்தரும்படி கூறியும் எவரும் எம்மீது கரிசனை காட்டவில்லை.

இன்று எங்கள் பிரதேசத்தில் எத்தனையோ பாடசாலைகளை இராணுவம் தங்கள காப்பரண்களாக வைத்திருப்பதையும், எத்தனையோ பாடசாலைகளை தங்கள் கம்பி வேலிக்குள் வைத்திருப்பதையும் தாங்கள் அறிந்திருக்கக்கூடும். எங்கள் மக்கள் மீதும், மாணவர்கள் மீதும் அரசாங்கம பாரபட்சம் காட்டுவது சர்வதேசம் அறிந்த உண்மை.

எங்களுக்கு சிங்கள மக்களைப்போல், சிங்கள மாணவர்களைப்போல் உரிமைகளை வழங்காவிடினும், அடிப்படை உரிமைகளையாவது பெற்றுத்தர வேண்டியது கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் சர்வதேசத்தின் பொறுப்பாகும்.

ஏனெனில், இவ்வளவு காலமாக இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் சம்பந்தமாக எவ்வித நடவடிக்கையையும் எடுத்தது என்று கூறமுடியாது.

இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ற போர்வையில் யுத்தமில்லாத சூழ்நிலை உருவாகியுள்ளது எனக் கருதினாலும், தமிழ மக்கள் வாழ்வில் ஓர் இருண்ட யுத்தம நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது. இரண்டு வருடங்களில் தமிழ் மாணவர்களாகிய எங்களுக்கு போர்க் காலத்தில் இருந்து எந்தவிதமான வேறுபாட்டையும் நாங்கள் உணர்ந்தறியவில்லை. ஒட்டுமொத்தமாகப் பார்க்கப்போனால் அரசாங்கம் வட- கிழக்கு மக்களுக்கு எவ்விதமான உதவிகளையும் செய்யாத பட்சத்தில் சர்வதேசத்தினையே நாங்கள நம்பியிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

புரிநதுணர்வு ஒப்பந்தம் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும் பொதுவாக எழுதப்பட்டபோது, தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் ஆகிய விடுதலைப்புலிகளை சமபலத்துடன் சமபங்கு உள்ளவர்களாக, தமிழ் மக்களால நிலைநிறுத்தி எழுதப்பட்டது. அதன் அடிப்படையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் மூலம் நாங்கள் எந்தவிதமான நன்மைகளையும் அடையவில்லை. ஆதலால் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இடைககால நிர்வாக யோசனை முன்வைக்கப்பட்டது.

அந்தயோசனையின் அடிப்படையில், தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறை வேற்றப்பட்டு சர்வதேச உதவிகள் நேரடியாகத் தமிழ் மக்களுக்கு வந்தடையும் என்ற நம்பிக்கையில் இருந்தோம். ஏனெனில், இவ்வளவு காலமும் வடக்கு - கிழக்கு மக்களுக்காக எந்தவிதமான சர்வதேச உதவிகளும் வந்து சேர்வதில்லை. இடையில் அரசாங்கம் தமிழ் மக்களைப் புறந்தள்ளி விடுகின்றது.

தற்போதும் அவ்வாறே அரசாங்கத்தின் ஊடாகவே சர்வதேச நிதி உதவிகள் வழங்கப்படப்போவதை அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். கடந்த காலங்களில் அரசாங்கம் சர்வதேச நிதிகளை யுத்தத்திற்குப் பயன்படுத்தியது. இனியும் ஒரு யுத்தம் வருமா? என்ற அச்சம் இளைய தலைமுறையாகிய எங்களிடையே தோன்றியுள்ளதுடன், கல்வியைப் பெறுதல் சம்பந்தமாக மாணவர்களாகிய நாங்கள் எதிர்நோக்குகின்ற சிக்கல்கள் [illegible]ம் என்கின்ற நிலையில் தற்போது நம்பிக்கையீனம் தோன்றியுள்ளது.

எனவே, தாங்கள் தமிழ் மக்கள், தமிழ் மாணவர் ஆகிய எங்களின் தேவைகளை உணர்ந்து இடைக்கால நிர்வாக சபையினை தமிழ மக்களிடம் வழங்கி, அவர்கள் மூலமாக சர்வதேச உதவிகள் தமிழ் மக்களைச் சென்றடைய வழிசெய்யுமாறு வட-கிழக்கு தமிழ் மாணவர்கள் சார்பில் வேண்டி நிற்கின்றோம்.

## யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

ஸ்ரீலங்காவில் நீண்டகாலமாக நிலவி வரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியாக தங்கள் அனுசரணையால் முன்னெடுக்கப்பட்டுவந்த சமாதான நடவடிக்கைகள் சிங்கள ஆட்சியாளர்களின் இழுத்தடிப்பினால் தொடர்ந்து முன்னேற்றமெதுவுமின்றி முடங்கிப் போயுள்ளன.

இராணுவத் தீர்வின் மீது நாட்டம் கொண்ட பேரினவாத சிங்கள ஆட்சியாளர்களின் இன்றைய போக்கை தாங்கள் அறிந்திருந்தும் 2005 ஆம் ஆண்டிற்கான இலங்கைக்கான நிதி உதவியாக 30 மில்லியன் அமெரிக்க டொலர்களை தங்கள் அரசு வழங்கவிருப்பது சமாதான முயற்சிகளுக்கு பெரும் பாதகமாக அமையும்.

தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு கிடைக்கும் வரை சர்வதேச நிதியுதவிகள் யாவும் ஸ்ரீலங்காவிற்கு வந்து சேர்வதைத் தடுப்பதன மூலமே சமாதானத்தை முன்னெடுக்க முடியும். எனவே, தங்கள் அரசு அபிவிருத்தி என்ற போர்வையில் நிதி உதவிகள் வழங்குவதை நிறுத்திக்கொள்ளவேண்டுமென்பது தமிழ் மக்களின் ஏகோபித்த குரலாகும். அதுவே நீடித்து நிலைக்க சமாதானத்திற்கு வழிவகுக்கும்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை அரசு சரிவர அமுல் படுத்தாததினால் இயல்பு வாழ்க்கை ஏற்படவில்லை, அமைதி, சமாதானம் உருவாகவில்லை, உடனடி மனிதாபிமானப்பணிகள் கூட நிறைவேற்றப்படவில்லை. இதனால் புரிந்துணர்வு உடன்படிக்கை கேள்விக்குறியாகியுள்ளது.

இச் சந்தர்ப்பத்தில் நடுவு நிலையைப் பேணும் தங்களைப் போன்ற நாடுகள் அரசிற்கு நிதி உதவி அளிப்பதானது யுத்தத்தை தூண்டுவதாகவே அமையும். இராணுவ சமநிலை புரழ்வும், ஆயுதப் பெருக்கமும் ஏற்படவே இவை வழிசெய்யும். அது முற்று முழுதாக சமாதானச் சூழலை தாக்கி அழித்து விடும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எவ்வித கலந்தாலோசனையும் இல்லாமல் ஒருதலைப் பட்சமாக வடக்கு-கிழக்கு புனரமைப்பு என்ற போர்வையில் அரசிற்கு நிதி உதவிகளை சர்வதேச நாடுகள் வழங்குமானால் அதனை தமிழர்கள் முற்று முழுதாக எதிர்ப்பார்கள். எதனைச் செய்ய வேண்டுமானாலும் தீர்வுவேண்டும். தீர்வு இல்லாத சமாதானத்தை நாம் வெறுக்கின்றோம். இந் நிலை தொடருமானால் புலிகளும், நாங்களும் சமாதானப் பாதையில் இருந்து விலகிப்போவது தவிர்க்க முடியாததாக அமையும என கூட்டுறவாளர்களின் சார்பாக எமது கருத்தை ஆழமாக வலியுறுத்திக் கூறுகின்றோம்.

## வடமாகாண அதிபர்கள் சங்கம்

இடைக்கால நிர்வாக அலகு அமைவதற்கு முன் வழங்கப்படும் வெளிநாட்டு உதவிகள் சமாதான முயற்சிகளை பின்னடையச் செய்வனவாகவே இருக்கும்.

கடந்த 20 ஆண்டு காலமாக இலங்கைச் சரித்திரத்தில் தமிழ் மக்கள் அனுபவித்த இழப்புகள் துன்ப துயரங்கள் யாவற்றுக்கும் தங்களது தளராத முயற்சியின் பயனாக இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இரண்டு ஆண்டு காலம் ஒப்பந்தம் ஒளிக்கீற்றாக விளங்கியது.

கடந்த இரண்டு ஆண்டு காலமாக சமாதான ஒப்பந்தம் ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்பட்டமைக்குக் காரணம் டோக்கியோ மாநாட்டில் சமாதானம் ஏற்பட்ட பின்னரே வெளிநாட்டு உதவிகள் வழங்கப்படவேண்டும் என எடுக்கப்பட்ட தீர்மானமே என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

கடந்த காலங்களில் அனேகமான வெளிநாட்டு உதவிகள் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்திற்காகவே செலவிடப்பட்டு வந்தன.

எனவே, சாமாதான முயற்சிகள் பயனுள்ள வகையில் அமைவதற்கு ஏதுவாக இடைக்கால நிர்வாக அலகு அமைக்கப்படவேண்டும். வடகிழக்குப் புனரமைப்பு புனர்நிர்மாண வேலைகளுக்கான வெளிநாட்டு உதவிகள் இடைக்கால நர்வாக அலகு மூலமே வழங்கப்படவேண்டும்.

## இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவக மாணவர் ஒன்றியம்

“தமிழினம் அமைதியையும் சமாதானத்தையும் விரும்பும் இனம் அவர்களுக்கெனத் தனித்துவமான கலாசார அடையாளங்கள் உண்டு. ஆனால் இலங்கை அரசு அடக்கு முறை மூலம் அவர்களது கலாசார அடையாளங்களை நொருக்க முயற்சிக்கின்றது.” தமிழினம் அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட இனமாகவே இருக்கவேண்டும் என அது விரும்புகிறது. மதவாத தமிழர்கள் மேற்கொண்ட அகிம்சை வழியிலான போராட்டங்கள் இரும்புக் கரம் கொண்டு அடக்கப்பட்டதன் விளைவாகவே இளைஞர்கள் ஆயுதப்போராட்டத்தை ஆரம்பித்தனர்.

நாட்டிலே அமைதியை ஏற்படுத்துவதற்கு முதற்படியாகவும் வட- கிழக்கு மாகாண தமிழ் மக்களது துன்பங்களை தீர்ப்பதற்கான முதல் நடவடிக்கையாகவும் விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வாகத்துக்கான ஆலோசனைகளைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

நிதி உதவும் நாடுகள் நிதி உதவியை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கினால் அவ் நிதி யுத்த தளபாடங்களை வாங்குவதற்கு அல்லது சிங்களப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு மாத்திரமே பயன்படுத்தப்படும். இதனால் தமிழ் மக்கள் மறுபடியும் பாதிக்கப்படுவர். எனவே தங்களது செல்வாக்கைப் பயன்படுத்தி இடைக்கால நிர்வாகம் வழங்கப்படும் வரை உதவிபுரியும் நாடுகள் அவர்களது நிதியுதவிகளை வழங்குவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

## யாழ்.கல்வி மேம்பாட்டுப் பேரவை

“இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இரண்டு தரப்பினரும் சர்வசம உரிமையுள்ள பங்காளர்கள். ஒரு தரப்புக்குச் சலுகை காட்டுவதும் மற்றொரு தரப்பை புறக்கணிப்பதும் ஏற்றதில்லை”

மீள் குடியேற்ற, புனரமைப்பு, புனர்நிர்மாண, உடல் உளரீதியாக வாழ்க்கையைத் திரும்ப அமைத்தல் ஆகியன பாதிக்கப்பட்ட மக்களை வழிநடத்திச் செல்பவர்களினாலேயே மேற்கொள்ள முடியும். அவர்களுக்குத் தான் எங்களது அபிலாஷைகள் தேவைகள் என்பன தெரியும்.

இதனாலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் வட-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் பற்றிய ஆலோசனைகளைச் சமர்ப்பித்துள்ளார்கள். இந் நிர்வாக அமைப்புப் பற்றி தங்களுக்கு எடுத்துக் கூறவேண்டியதில்லை.

எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அர்த்தமற்றதும் பொருத்தமில்லாததுமான சாமாதானப் பேச்சுக்கள் அபாயகரமானவை. இவ் விடயங்களை கருத்தில் எடுத்து அவல வாழ்வு வாழும் வட-கிழக்கு மக்களது புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளுக்காக போதிய நிதியை பெற வழி செய்யவேண்டும்.

## கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்

இலங்கையின் அரசியல் கலாசாரம் சிங்கள பௌத்தர்களின் பேரினவாதத்திலேயே தங்கியுள்ளது. சிங்கள பௌத்தர்களின் பேரினவாதத்தால் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை தீவிரமடைந்து உள்நாட்டு யுத்தமாக உருவடைந்துள்ளது.

ஜப்பான், நோர்வே அரசுகள் இலங்கை அரசாங்கத்துக்கு நிதி உதவி அளிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

தமிழ் மக்கள் மீது சிங்கள பௌத்த பேரிவாதிகளால் திணிக்கப்பட்ட யுத்தம் இனப் பிரச்சினை காரணமாகவே அரசுக்கு இன்று நிதி நெருக்கடி எற்பட்டுள்ளது.

சிதைந்து போன பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கம் யுத்த தளபாடங்களை வாங்கிக் குவிப்பதிலும் யுத்த ஏற்பாடுகளைச் செய்வதிலும் ஈடுபாடு காட்டி வருகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முதற்படியாக விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகத் திட்டமொன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

இனப்பிரச்சினைக்குத் காத்திரமான தீர்வொன்றைக் காண்பதற்குப் பதிலாக அரசாங்கம் பிரச்சினையை இழுத்தடிப்பதிலேயே குறியாகவுள்ளது.

நிதியுதவிகளை வழங்கி எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோல இலங்கையின் யுத்த முயற்சிகளுக்கு உதவாமல் சர்வதேச சமூகம் இராஜாங்க ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் இலங்கை அரசு சமாதானக் கதவுகளைத் திறப்பதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

## யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை

‘இலங்கையில் நீண்டகாலமாக நிலவி வரும் இனப் பிரச்சினைக்கு சாத்வீகமான அரசியல் தீர்வொன்றைக் காண தங்கள் அரசாங்கமும் இதர சர்வதேச சமூகமும் காட்டி வரும் அக்கறை குறித்து எமது இதய பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.”

இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வுகாணும் முயற்சி மேற்கொள்ளப்படும் போதெல்லாம் இலங்கை அரசு அதன் வகுப்பு வாதநோக்கினால் யுத்தத்தை தமிழ் மக்கள் மேல் திணிக்கும் முயற்சியையே முன்னெடுத்து வருகிறது. கடந்த 3 தசாப்த காலமாக இலங்கை அரசு அரசியல் ரீதியாக இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை. ஆனால் சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு கொடுத்து வரும் அழுத்தம் காரணமாகவும் விடுதலைப்புலிகள் காட்டிவந்த சகிப்புத்தன்மை காரணமாகவும், தற்போது சமாதானச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அத்துடன், இலங்கை அரசு அரசியல் சாதுரிய முயற்சிகள் மூலம் சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகளை திசை திருப்ப முயன்று வருகிறது. ஜனாதிபதி முழு முனைப்புடன் விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எதிரானது என்று கூறிவருவதுடன் யுத்த நிறுத்தத்தையும் சமாதானத் தீர்வையும் மீறும் வகையிலான தூண்டுதல முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது.

கடந்த 3 ஆண்டுகாலமாகத் தங்களது அரசும் சர்வதேச சமூகமும் எடுத்து வரும் முயற்சிகளின் பயனாக அரும்பியுள்ள சாமாதானச் சூழ் நிலையும் அரசியல் தீர்வுக்கான முன் முயற்சிகளும் இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாதென்பதை நாங்கள் நன்கு அறிவோம்.

இலங்கை அரசின் மீது பொருளாதார அரசியல் நடவடிக்கைகளைக் கையாள்வதன் மூலம் அவர்களை சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்லத்தூண்டுவது தங்கள் பொறுப்பாகும்.

தமிழ் மக்களின் செழிப்பான வாழ்வு தான் இலங்கை வாழ இதர சமூகங்களின் செழிப்பான வாழ்வுக்கு பாதை அமைக்கும்.

தமிழ் மக்களினதும் இதர சமூகங்களினதும், குறிப்பாக சிங்கள சமூகத்தினதும் செழிப்பான வாழ்வு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய இடைக்கால நிர்வாக அமைப்பை விடுதலைப்புலிகளிடம் கையளிப்பதன் மூலமே கிடைக்கும்.

# வினைகள் தீர்த்திடும் விநாயகர் சதுர்த்தி

"நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண"

என்கிறார் உமாபதி சிவாச்சாரியார். யானை முகத்தைப் போலும் முகத்தையுடைய விநாயகப் பெருமானை மன, மொழி, மெய்களி

**இன்று விநாயகர் சதுர்த்தி அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது**

னால் துதிப்போமானால் அவர் எம் மீது திருவருள் பொழிந்து காட்டுவார்.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்! விநாயகனே வேட்கை தணிவிப்பான்; விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் என்பதும், திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற் பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்" எனும் பாடல் ஞான முதல்வர் விநாயகப் பெருமானின வழிபாட்டின் மகத்துவத்தை உணர்த்துகின்றன.

விநாயகப் பெருமான் மீது நம்பிக்கை வைத்தவர்களுக்கு "வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலரால் நோக்குண்டாம" என்று ஔவையார் எமக்குச் சொல்லுகிறார். "ஓம் கம் கணேசாய நம" என்ற விநாயகப் பெருமானது மந்திரத்தைச் சொல்லிக்கொண்டிருந்தால் தடைகள் நீங்கி எல்லாக் காரியங்களும் இனிது நிறைவேறும்.

## நிஜமான விநாயகர் தத்துவம்


"பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் கலந்துனக்கு நான் தருவேன் நீ எனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா" என்று விநாயகப் பெருமானிடம் ஔவைப்பிராட்டி வேண்டினார். அவ்வாறே இறைவனுக்கு விருப்பமான எதைக் கொடுக்கிறீர்களோ அப்போது இறைவன் உங்களுக்குத் தேவையானதை அளிப்பார். இந்த உண்மையை விளக்குவது விநாயகர் தத்துவம்.

சுயநலத்தைத் தியாகம் செய்து பிறர் நலன் நாடி ஆனமீக வாழ்க்கை நடாத்தவேண்டும். அதன் மூலம் தெய்வீகத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். இதுவே நிஜமான விநாயகர் தத்துவமாகும்.

## ஆவணிச் சதுர்த்தி

விநாயகர் விரதங்களுள் மிகவும் சிறப்பானது ஆவணிச் சதுர்த்தியாகும். ஆவணிமாதத்து வளர்பிறையில் வரும் சதுர்த்தியே ஆவணிச் சதுர்த்தியாகும். ஆவணிச் சதுர்த்தியன்று விரதமிருப்போர் விநாயகப் பெருமானுக்குப் பூசைகள் செய்து பகல் முழுவதும் உணவு உண்ணாமல் இருந்து இரவில் பால், பழம் உண்ணலாம்.

ஆவணிச் சதுர்த்தியன்று விநாயகப் பெருமானுக்கு சிறப்பான நீவேதனமாக தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழங்கள், (நாவல், விளாம் பழம்) வாழைப்பழம், வெள்ளரிப் பழம், கரும்பு, அப்பம், மோதகம் ஒவ்வொன்றிலும் 21 என்ற எண்ணிக்கையில் படைத்தல் நன்று. ஆவணிச் சதுர்த்தியன்று மிகச் சிறப்பான அம்சம் 21புஷ்பம், 21பத்திரம், 21 அறுகம்புல் கொண்டு தனித் தனியாக அர்ச்சனை செய்தல் அல்லது மாசிப்பச்சை, கையாத்கரை, வில்வம், ஊமத்தை, நொச்சி, நாயுருவி, கத்தரி, வன்னி, அலரி, காட்டாத்தி,



எருக்கு, மருது, விஷ்ணு, கரந்தை, மாதுளை, தேவதாருமரு, நெல்லி, சிறுசண்பகம், செந்தாளி, பாதிரி, அறுகு" என்று 21 பத்திரங்கள் கொண்டு அர்ச்சிப்பதை 'புட்ப விதி' கூறுகிறது.

ஆவணிச் சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்து முருகன் சூரனை எதிர்த்து வெற்றிபெற்றார். கர்த்தமன் என்னும் அரசன் இழந்த அரசை மீளப்பெற்றான். நளன் அனுஷ்டித்து சிவபேறு பெற்றான். சந்திராங்கன் இருமை இன்பமும் பெற்றான். மன்மதன், ஆதிசேடன் இன்பமுற்றனர்.

## தோப்புக் கரணம்

நமது தலையின் இரு முன் நெற்றிப் பொட்டிலும் இரண்டு கைகளின் முட்டியினால் குட்டி, இரண்டு கைகளாலும் மாறு காதுகளைப் பிடித்துத் கொண்டு தோப்புக் கரணம் போட்டு வணங்குகிறோம்.

இதுவே விநாயகப் பெருமானுக்குப் பிடித்த வழிபடும் முறையாகும்.

தோப்புக் கரணம் போடுவதும் நெற்றியில் குட்டிக்கொள்ளவதும் மூலாதாரத்தில் பாம்பு போன்று சுருண்டுகிடக்கும் குண்டலினி சக்தியை தட்டி எழுப்புகிறது. இதனால் கஷு்ம்னா நாடி திறந்து கொள்கிறது. நெற்றிப்பொட்டில் குட்டிக்கொள்வதினால் அங்கே உள்ள அமிர்த கலசம் மேலே எழும்பி அந்த அமிர்தம் உடல் முழுவதும் பரவுகிறது. இதனால் உடம்பில் சுறுசுறுப்பும் மனதில் எழுச்சியும் தியானத்திற்கு ஏற்ற மன ஒருமைப்பாடும் கிடைக்கின்றன. அகந்தையும் ஆணவமும் அழிந்ததைக் காட்டுவதே தோப்புக் கரணம் போடுவதாகும். கரணம் என்றால் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கும் சேர்ந்ததாகும். இதை 'அந்தக் கரணம்' என்று சொல்லுவார்கள். கை, கால், கண், மூக்குப் போன்றவை புறக் கரணம் எனப்படும். இந்த இரண்டு கரணங்களை அடக்கியாள்வதைச் சொல்வதே யோகமாகும்.

அகம், புறம் என்னும் இரண்டு கரணங்களும் செயலற்றுப் போய் இறைவனிடம் லயம் அடைகிறது என்று பொருள்படுவதே 'தோப்புக் கரணம்' எனப்படும்.

வேழமுகத்து விநாயகரை ஆவணிச் சதுர்த்தியில் முறைப்படி பிரார்த்தித்து பெருமானுக்கு விருப்பமானதைக் கொடுத்து எங்களுக்குப் பிடித்தமானதைப் பெற்று நல்வாழ்வு பெறுவோமாக.

சைவப்புலவர்
**சி.நந்தகுமார்**

## நன்கொடை கொடுப்பனவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு 2005 ஆம் ஆண்டிற்கான நன்கொடைப் கொடுப்பனவு (ரூபா 1600) சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தால் வழங்கப்பட்டு வருகின்றது.

எனவே பதிவு செய்யப்பட்ட நன்கொடை பெறாத சனசமூக நிலைய நிர்வாகிகளை சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கான நன்கொடைப் கொடுப்பனவு 27ஆயிரத்து 200 ரூபா வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத் தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-47)

## நடமாடும் செயலக சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/72 சின்னக்கடை, ஜே/73 யாழ்.நகர் மேற்கு, ஜே/74 யாழ்.நகர் கிழக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கு பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொடுத்தல் போன்றவற்றிற்கான நடமாடும் செயலக சேவையொன்று எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.அடைக்கல மாதா ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் வசமுள்ள ஆவணங்களுடன் சமுகமளித்து இச் செயல்முறையின் உச்சப் பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பா.செந்திநந்தனன் கேட்டுள்ளார்.

ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்க மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பங்கீட்டு அட்டைகள், குடும்ப அட்டைகளைக் கொண்டு வந்தால் கருமங்களை இலகுவாக்கலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# வை.கோ.திடீரெனக் கைதாகி விடுதலை கட்சித்தலைவர்களின் கடும் கண்டனம்

சென்னையில் நடைப்பயணம் மேற்கொண்ட ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. அண்மையில் கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். அவருடன் கைது செய்யப்பட்ட மற்றைய ம.தி.மு.க.வினரும் விடுவிக்கப்பட்டனர்.

வை.கோ. கைது செய்யப்பட்டதற்குப் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் நெல்லையிலிருந்து நடைப்பயணம் தொடங்கிய வை.கோ. அண்மையில் சென்னை நகரில் நடைப் பயணமாகச் சென்று தீவுத் திடலில் மாலை நடைபெறவிருந்த பொதுக் கூட்டத்தில் தமது பயணத்தை முடிப்பதாக அறிவித்திருந்தார். ஆனால் சென்னையில் அவர் நடைப் பயணம் செய்ய அனுமதியில்லை என்று பொலிஸார் கூறியிருந்தனர். இந்நிலையில் அண்மையில் இரவு பரங்கி மலைப் பகுதியை வந்தடைந்த வை.கோ.வை பொலிஸார் சந்தித்து நடைப் பயணகுழு சென்னைக்குள் நுழைய காவல்துறை அனுமதி மறுத்துள்ள விபரத்தைத் தெரிவித்தனர்.

இதையடுத்து நள்ளிரவு 12 மணியளவில் திடீரென்று தீவுத்திடல் நோக்கி நடைப்பயணத்தைத் தொடர்ந்த வை.கோ. அதிகாலை 4 மணியளவில் தீவுத் திடல் வாயிலில் தடுத்து நிறுத்தப்பட்டுக் கைது செய்யப்பட்டார். இதையடுத்து சிந்தாதிரிப் பேட்டை காவல் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட வை.கோ. மதியம் 12.30 மணியளவில் விடுவிக்கப்பட்டார்.

வை.கோ. கைது குறித்து தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம், பாட்டாளிமக்கள் கட்சி நிறுவுநர் டாக்டர் ராமதாஸ், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் வரதராஜன், நல்லைக்கண்ணு, திராவிட கழகத்தலைவர் வீரமணி உட்படபல்வேறு கட்சித்தலைவர்களும் பெரும கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வை.கோ. கைது செய்யப்பட்டது ஜனநாயக விரோதச் செயல் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார். சென்னை கோபாலபுரத்திலுள்ள குறுகிய தெருக்களில் ராமகோ பாலன ஊர்வலத்துக்கு அனுமதியளித்த பொலிஸார் வை.கோ. நடைப்பயணத்தைச் சிறப்பு நிகழ்வாக எடுத்துச் கொண்டு அனுமதி அளிக்காதது பாரபட்சமான செயல் என்று அவர் குறிப்பிட்டார். (கு)

## இந்தியாச் செய்திகள்



**சைக்கிளில் ஆட்டுக் கொம்புகளை கைப்பிடியாக அமைத்துக் கொண்டு வலம் வருகிறார் மதுரை தல்லா குளத்தைச் சேர்ந்த இவர்.**



நான்கு நாள் அரசு முறைப் பயணமாக தென்னாபிரிக்கா சென்றுள்ள குடியரசுத் தலைவர் அப்துல் கலாமைஅண்மையில் கேப்டவுன் விமான நிலையத்தில் தென்னாபிரிக்க போக்குவரத்து அமைச்சர் ஜெஃப் ரெடிபே உற்சாகமாகக் கைகுலுக்கி வரவேற்றார்.

# நகை வியாபாரியை கடத்தி தங்க நகைகள் கொள்ளை

தஞ்சையில் நகை வியாபாரியொருவரை மர்ம நபர்கள் கடத்திச் சென்று 8 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையடித்துள்ளனர்.

கோவையைச் சேர்ந்த அனந்த கிருஷணமூர்த்தி என்ற நகை வியாபாரி அண்மையில் தஞ்சைக்குச சென்ற போது மர்ம நபர்கள் 7 பேர் கத்தியைக் காட்டி அவரை மிரட்டி காரில் கடத்திச் சென்றனர்.

பின்னர் அவரிடமிருந்து 9 கிலோ தங்க நகைகளைப் பறித்துக் கொண்டு திருச்சி மாவட்டம் வெங்கூர் என்ற கிராமத்தில் அவரை இறக்கி விட்டு கொள்ளையர்கள் தப்பியோடிவிட்டனர்.

அனந்த கிருஷ்ணமூர்த்தி திருவிரும்பூர் காவல் நிலையத்தில் இது குறித்துப் புகார் கொடுக்கச் சென்ற போது அங்கிருந்த பொலிஸார் புகாரை வாங்க மறுத்து தஞ்சைக் காவல் நிலையத்தில் புகார் செய்யுமாறு கூறியுள்ளனர்.

இத் துணிகரக் கொள்ளை குறித்து விசாரித்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (து)

# ஈராக்கில் கடமை புரிந்துவரும் அவுஸ்திரேலியர்களுக்கு ஆபத்து

## கடத்தப்போவதாக தீவிரவாதிகள் மிரட்டல்


ஈராக்கில் கடமைபுரியும் அவுஸ்திரேலியர்களை கடத்திச் சென்று கொல்லப் போவதாக ஈராக்கில் உள்ள இஸ்லாமிய தீவிரவாத அமைப்பு ஒன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகளின் தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு பக்க பலமாக அவுஸ்திரேலிய அரசு செயற்பட்டு வருவதால் ஈராக்கில் உள்ள அவுஸ்திரேலிய பிரஜைகள் 24 மணி நேரத்துள் மீள அழைக்கப்படவேண்டும் எனவும் இல்லாவிட்டால் அவர்களைத் தாம் கடத்திச் சென்று கொல்லப்போவதாகவும் தீவிரவாதிகள் எச்சரித்துள்ளனர்.

எனினும், ஈராக்கில் உள்ள அவுஸ்திரேலியர்கள் நலமுடன் இருப்பதாகவும் தீவிரவாதிகளின் எச்சரிக்கைகளுக்கு அஞ்சி தீவிரவாதத்திற்கு எதிரான தமது கொள்கைகளை மாற்றப் போவதில்லை எனவும் அவுஸ்திரேலிய பிரதமர் தெரிவித்தார்.

இந்நிலையில் ஈராக்கில் தங்கியுள்ள அவுஸ்திரேலிய பிரஜைகளினது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள போதிலும் அது குறித்து அவுஸ்திரேலிய அரசு உடனடி நடவடிக்கைகளை எடுத்து தன் பிரஜைகளைப் பாதுகாக்க நடவடிக்கைகளை எடுக்கவில்லை என அந்நாட்டவர்களால் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

(ப)



சென்னை பரங்கிமலை இராணுவ அதிகாரிகள் பயிற்சி கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை நடந்த நிகழ்ச்சியில் 12 ஆயிரம் அடி உயரத்திலிருந்து பரசூட் மூலம் குதித்து சாகசம் புரியும் வீரர்.

# ரஷ்யாவில் நடந்த துயரத்தை வேடிக்கையாக்கிய சீனத் தொலைக்காட்சி நிறுவனம்

(பெய்ஜிங்)

சோகத்தையும் துயரத்தையும் வேடிக்கையாக்கும் குரூர நிகழ்ச்சி சீனத் தொலைக்காட்சியில் நடந்துள்ளது. அதற்குப் பொறுப்பான 3 அதிகாரிகளைத் தண்டிக்கும் வகையில் அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டது அந்தத் தொலைக்காட்சி நிறுவனம்.

அண்மையில் ரஷ்யாவில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் இறந்தவர்களின் எண்ணிக்கை என்ன என்று கேட்டு போட்டி நடத்தியது சீனத் தொலைக்காட்சி. அதைப் பொதுமக்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர். அதையடுத்து அந்த தொலைக்காட்சி நிறுவனத்தின் செய்திப் பொறுப்பாளர் மற்றும் நிகழ்ச்சித் தயாரிப்பு அதிகாரிகள் இருவரைப் பணியிலிருந்து நீக்கிவிட்டது.

சீன மத்திய தொலைக்காட்சி செப்ரெம்பர் 6 ஆம் திகதி நடத்திய கேள்வி - பதில் போட்டியில், ரஷ்யாவில் பள்ளிக்கூடத்தில் பயங்கரவாதிகள் தாக்கியதில் இறந்தோர் எண்ணிக்கை 1) 402, 2) 338, 3) 322, 4) 302 இவற்றில் எது சரி என்ற கேள்வியைக் கேட்டிருந்தது. இது மக்களுக்குப் பெரும் கோபத்தை ஏற்படுத்திவிட்டது. ஒரு துயரச் சம்பவத்தைப் பற்றி இப்படி கேள்வி கேட்பது மிகவும் தரக்குறைவானது, குரூரமானது என்று மக்கள் தம் கோபத்தை வெளிப்படுத்தியுள்ளனர். அதையடுத்து, அதற்குப் பொறுப்பான 3 அலுவலர்களைப் பணியிலிருந்து நீக்கிவிட்டது தொலைக்காட்சி நிர்வாகம்.

(ப-7)

# பயங்கரவாதத்தை எதிர்த்து அரசியல் அமைப்புச் சட்டம்

## ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிவிப்பு

பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டக் கோட்பாடுகளுடன் கூடிய அரசியல் அமைப்புச் சட்டம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் தாம் ஈடுபட்டு வருவதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்தார்.

அண்மையில் ரஷ்யாவில் உள்ள ஒஸ்லாம் நகர்ப்பள்ளி ஒன்றில் தீவிரவாதிகளின் செயற்பாடுகளால் இடம்பெற்ற மோதல் சம்பவங்களை அடுத்து 400ற்கும் அதிகமான பள்ளிச் சிறார்கள் கொல்லப்பட்டனர்.

இத்தகைய துயரச் சம்பவங்கள் இனி மேலும் நடக்காததினை ஆவண செய்யுமுகமாகவே இச் சட்டம் உருவாக்கப்படவுள்ளதாக புடின் மேலும் தெரிவித்தார்.

ரஷ்யாவினை தமது செயற்பாடுகளுக்குத் தளமாகப் பயன்படுத்தி வரும் தீவிரவாதிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாகவே இவ் அரசியல் அமைப்பு மாற்றம் கொண்டுவரப்படவுள்ளன.

இதேவேளை, தீவிரவாதிகளின் ஊடுருவல்களையும், தாக்குதல்களையும் முறியடிப்பதற்காக ரஷ்யாவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

(ப)

# வேகமாக தப்பிச் சென்ற கார் திருடன் ஒருவன் விபத்தில் சிக்கிப் பலி

அமெரிக்காவில் கார் திருடன் ஒருவன் காரைத் திருடிச் சென்றபோது பொலிஸார் துரத்தியதால் காரில் இருந்த குழந்தையைத் தெருவில் எறிந்துவிட்டுத் தப்பியோடிவிட்டான்.

சினிமாவில் வருவது போல நடந்த இச் சம்பவம் பொலிஸ் வீடியோவில் தத்ரூபமாகப் பதிவாகியுள்ளது.

தெருவோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றை திருடன் ஒருவன் திருடி வேகமாக ஓட்டிச் சென்றான். அப்போது காரின் உரிமையாளரினால் காரில் விட்டுச் செல்லப்பட்டிருந்த குழந்தை அழத் தொடங்கியது.

கார் வேகமாகச் செல்வதைப் பார்த்துச் சந்தேகமடைந்த பொலிஸார் திருட்டுக் காரை 160 கிலோ மீற்றர் வேகத்தில் துரத்திச் சென்றனர். இதைப் பார்த்த திருடன் குழந்தையை தொட்டிலோடு தெருவில் தூக்கியெறிந்தான். தெருவின் நடுவில் கிடந்த குழந்தையைப் பொலிஸார் பாதுகாப்புடன் எடுத்துச் சென்றனர்.

இதற்கிடையே பொலிஸாரிடமிருந்து தப்பக் காரை வேகமாக ஓட்டிச் சென்ற திருடன் மற்றொரு காருடன் மோதியதில் அதே இடத்தில் உயிரிழந்தான்.

(ப)

# மலேஷிய முன்னாள் துணைப்பிரதமர் அரசியலில் நுழைய தடை நீடிப்பு

(கோலாலம்பூர்)

மலேஷிய முன்னாள் துணைப் பிரதமர் அன்வர் இப்ராகிம் மீண்டும் அரசியலில் பிரவேசிக்க முடியாதபடி அந்நாட்டின் உச்ச நீதிமன்றத்தின் புதிய தீர்ப்பு அமைந்துள்ளது.

லஞ்சக் குற்றச்சாட்டுத் தொடர்பான ஒரு வழக்கில் இருந்து தன்னை விடுவிக்க வேண்டும், அதன் மூலம் அரசியலில் நுழைவதற்கு தன் மீது உள்ள தடை நீக்கப்பட வேண்டும் என்று அவர் கடைசியாகத் தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் புதன்கிழமை நிராகரித்துள்ளது.

லஞ்ச வழக்குத் தொடர்பாக 6 ஆண்டுகளும் பாலியல் குற்றம் தொடர்பாக 9 ஆண்டுகளும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அன்வர், 2 வாரங்களுக்கு முன் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார். இருப்பினும் லஞ்ச வழக்குத் தொடர்பாக அந்நாட்டு சட்டப்படி 2008 வரை அவர் அரசியலில் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது.

(ப-7)

# ஜப்பானில் வாழ்வோரில் 100 வயதைக் கடந்தோர் 23038 பேர்

## அதிலும் பெண்கள் தொகையே மிகஅதிகம்

(டோக்கியோ)

ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்ந்து, நூறு வயதைக் கடந்து வாழ்பவர்களின் எண்ணிக்கை ஜப்பானில் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது.

அந்த வகையில் ஜப்பானில் இந்த மாத இறுதியில் நூறு வயதைக் கடந்தவர்கள் எண்ணிக்கை மொத்தம் 23,038 பேர். இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 2ஆயிரம் பேர் அதிகம் என்று நாட்டின் சுகாதார மற்றும் தொழிலாளர் நலத்துறை தெரிவித்துள்ளது.

ஜப்பானில் பெண்கள்தான் அதிக அளவில் நீண்ட ஆயுளுடன் வாழ்கின்றனர் என்ற விபரமும் தெரியவந்துள்ளது. நூறு வயதைக் கடந்து வாழ்பவர்களில் 84.7 சதவீதம் பேர் பெண்கள். முதியோருக்கு கௌரவம் அளிக்கும் விதத்தில், ஜப்பானில் வரும் திங்கட்கிழமை "முதியோர் தினம்" கொண்டாடப்படுகிறது.

1963ஆம் ஆண்டிலிருந்து நூறு வயதைக் கடந்தோர் பற்றிய புள்ளி விபரத்தைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுத்தது. அப்போது நூறு வயதைக் கடந்தோர் எண்ணிக்கை 153ஆக இருந்தது. அதிலிருந்து தற்போது வரையில் இந்த எண்ணிக்கை 150 மடங்குகளாக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு தான், இந்த எண்ணிக்கை முதல் முறையாக 20ஆயிரத்தைத் தொட்டது.

கடந்த 12 ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் 10 சதவீதம் பேர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

(ப)

# நீர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் செவ்வாயில் குடியேற வாய்ப்பு!

செவ்வாய்க் கிரகத்தில் நீர் இருப்பதைக் கண்டுபிடிக்க முடிந்தால் அடுத்த 20 முதல் 30 ஆண்டுகளுக்குள் அங்கே மனிதர்கள் சென்று வசிக்க முடியுமென விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

செவ்வாயின் தரை மேற்பரப்பை ஆராயும் நாசாவின் ஆராய்ச்சிகளுக்குப் பொறுப்பானவரான ஆர்தர் தோம்ஸன் என்ற விஞ்ஞானி இந்தக் கருத்தைத் தெரிவித்தார். இக் கிரகத்தின் மண்ணை ஆராய்வதற்காக 2 இயந்திர மனிதர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். இந்த இயந்திர மனிதர்கள் அனுப்பிய தகவல்களின் அடிப்படையில் செவ்வாய்க்கிரகம் பூமியை ஒத்த தன்மைகளைக் கொண்டிருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

ஸ்பிரிட், ஒப்பரியூனிட்டி ஆகிய விண்கலங்கள் செவ்வாயில் போதியளவு நீர் இருந்திருக்கலாம் என்பதை ஊர்ஜிதப்படுத்தும் தகவல்களை பூமிக்கு அனுப்பியுள்ளமை குறிப்பிடக்கதக்கது.


(ப-7)

### ஐ.சி.சி.மினி உலகக்கிண்ணப் போட்டியில்

# அரையிறுதிப் போட்டிக்கு ஆஸி. தகுதி

## நியூஸிலாந்து அணி வெளியேற்றம்

இலண்டனில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.சி.சி.சம்பியன் கிண்ணப் போட்டிகளில் நேற்று



முன்தினம் ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற அவுஸ்திரேலியா நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் அவுஸ்திரேலியா 7 விக்கெற்றுக்களால் நியூஸிலாந்து அணியை இலகுவாக வென்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.


நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கிப் பொண்டிங் நியூசிலாந்து அணியை முதலில் துடுப்



பெடுத்தாட அழைத்தார். அதன்படி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக நியூசிலாந்து அணித்தலைவர் பிளேமிங்கும் நாதன் அஸ்லேயும் களமிறங்கினர்.

இருவரும் நிதானமாக ஆட்டத்தை தொடங்கிய போதும் 18ஓட்டங்களில் மக்றாத்தின் பந்து வீச்சில் நாதன் அஸ்லே எல்.பி.டபிளயூ முறையில் ஆட்டமிழந்தார். அதைத் தொடர்ந்து வந்த இரு வீரர்களும் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தனர். அதன் பின் வந்த வீரர்களாலும் அதிகநேரம் நிலைத்து ஆட முடியவில்லை. மக்மிலன் 18 ஓட்டங்களுடனும், கெயின்ஸ் ஓட்டம் எதுவும் பெறாமலும், ஓரம் 15ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இந்நிலையில் நியூசிலாந்து 7விக்கெற்றுக்களை இழந்து 89 ஓட்டங்களை மாத்திரமே பெற்று இக்கட்டான நிலையில் இருந்தது.

ஹரிஸ், மக்மிலன் ஜோடி நிதானமாக விளையாடி ஓட்டங்களை அதிகரித்த போதும் துரதிஷ்டவச



மாக மக்மிலன் 18ஓட்டங்களில் ரண்அவுட முறையில் ஆட்டமிழந்தார். இந்நிலையில் அடுத்து 8ஆவது விக்கெற ஜோடி சேர்ந்த ஹரிஸூம் மக்கொலமும் சேர்ந்து 35ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றனர். ஹரிஸ் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அதன்பின் மக்கொலத்துடன் இணைந்து விக்ரோறியும், ஓட்டங்களை அதிகரித்தனர். மக்கொலம் சிறப்பாக விளையாடி 47ஓட்டங்களைப பெற்றார். மக்கிறாத், காஸ்பரோவிஸ் ஆகியோர் தலா 3விக்கெற்றுக்களைப் பெற்றனர். இறுதியில் 50ஓவர்களில் நியூசிலாந்து 9விக்கெற்றுக்களை இழந்து 198 ஓட்டங்களை பெற்றிருந்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 37.2ஓவர்களில் 3விக்கெற்றுக்களை மாத்திரம இழந்து இலக்கை அடைந்து



இலகுவாக வெற்றிபெற்றது. ஹேடன் 47 ஓட்டங்களைப் பெற்றார். மாட்டீன் 60 ஓட்டங்களுடனும் சைமண்ஸ் 71 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தனர்.

அரையிறுதிப் போட்டியில அவுஸ்திரேலியாவுடன், இலங்கைக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான போட்டியில் வெற்றிபெறும் அணியும் விளையாடும்.

இதேவேளை மேற்படி ஆட்டதில் தோல்வியடைந்த நியூசிலாந்து அணி தொடரில் இருந்து வெளியேறுகிறது. (ப-7)



எதென்சில் நடந்து முடிந்த ஒலிம்பக் போட்டிகளை அவ்வளவு சீக்கிரம் யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அந்த போட்டிகள் பற்றிய நினைவலைகள் மறக்கும் முன்னரே அடுத்த 'மெகா" போட்டிகளுக்கு தயாராகி விட்டது எதென்ஸ். ஆம். (செப். 17-28) உடல் ஊனமுற் றோருக்கான ஒலிம்பக் விளை யாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் பங்கேற்கும் தட கள வீரர் ஒருவர் எதென்சில் உள்ள பழங்கால நினைவுச் சின்னம் அமைந்துள்ள பகுதியில் முச்சக்கர வண்டி மூ லம் பயிற்சி மேற்கொள்ள செல்கிறார்.

# இலங்கை வீராங்கனைகள் மாயம்

ஜேர்மனிக்கு சுற்றுப்பயணம் சென்றுளள இலங்கைக் கரப்பந்தாட்ட வீராங்கனைகள் ஒட்டுமொத்தமாக மாயமாகிவிட்டனர்.

இலங்கை கரப்பந்தாட்ட அணியைச் சேர்ந்த 23 வீராங்கனைகள ஜேர்மனிகது சுற்றுப்பயணம் சென்றிருந்தனர். திடீரென அவர்கள் கூண்டோடு மாயமாகி விட்டனர். எங்கே சென்றார்கள், யாருடன் சென்றார்கள் என யாருக்குமே தெரியவில்லை. மாயமான வீராங்களைகள் பற்றி ஜேர்மனி பொலிசார் நடத்திய விசாரணைகளில் இலங்கை வீராங்கனைகள் பிரான்ஸ் நாடடுக்கு அரசியல் தஞ்சம் தேடிச் சென்றிருப்பது தெரியவந்தது.

ஜேர்மனியின் விட்டிஸ்லிங்கன் பகுதியில் தாங்கள் தங்கியிருந்த அறையை அவசர, அவசரமாகக் காலிசெயது விட்டுச்சென்ற இலங்கை வீராங்கனைகள் போகும் போது ஒரு கடிதம் எழுதி வைத்துச்சென்றிருக்கின்றனர். ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த அந்தக் கடிதத்தில், எங்களைத் தேடவேண்டாம நாங்கள பிரான்ஸ் நாட்டுக்குச் செல்கிறோம். மீண்டும் எங்கள் தாய் நாட்டுக்கு திருப்பவே மாட்டோம் என எழுதி வைத்துள்ளனர். ஒட்டு மொத்தமாக, வீராங்கனைகள் ஓட்டம்பிடிக்க என்ன காரணம் என்று பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (ப-8)

## விளையாட்டுச் செய்திகள்

### சுண்டுக்குளி சன சமூக நிலையத்தின்

# 76வது ஆண்டு நிறைவுதின விளையாட்டு நிகழ்வுகள்

(சுண்டுக்குளி)

சுண்டுக்குளி சனசமூக நிலையம் அதன் 76வது ஆண்டு நிறைவை முன்னிட்டு சுண்டுக்குளி கிராம மட்டத்தில், விளையாட்டுப் போட்டிகளும் மற்றும் கலை, கலாசார நிகழ்வுகளையும் நடத்தியுள்ளது.

அந்தவகையில் இச் சனசமூக நிலையத்தால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விபரம் வருமாறு:-

ஆண்களுக்கான 30கிலோ மீற்றர் சைக்கிள் ஓட்டப்போட்டியில் 1ஆம் இடம் எம்.ஞானம், 2ஆம் இடம் பி.சதிஸ் 3ஆம் இடம் எல்.புலேந்திரன், 4ஆம் இடம் ஏ.றொக்கேசியன், 5ஆம் இடம் பி.கண்ணன்.

பெண்களுக்கான 15கில்லோ மீற்றர் சைக்கிள் ஓட்டப்போட்டி 1ஆம் இடம் வை.சியாளினி, 2ஆம் இடம் கே.டொறின், 3ஆம் இடம் வைஉ.சாலினி, 4ஆம் இடம், பி.சுவர்ணா, ஆண்கள் மரதன் ஓட்டம் 1ஆம் இடம் ஜே.ஜெயதாஸ் 2ஆம் இடம் ஏ.பத்மராச், 3ஆம இடம், எல்.அரவிந்தன், 4ஆம் இடம், ஜே.வினோத், 5ஆம் இடம் எஸ்.சஞ்சீவ்.

மாலையில் சிறுவர்களுக்கான விளையாட்டுப்போட்டிகளும் கலை கலாசார நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இறுதியில் பரிசில்கள் வழங்கும நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகரசபை ஆணையாளர் கலாநிதி குணராசாவும சிறப்பு விருந்தினர்களாக மரியன்னை பேராலய பங்குத்தந்தை மைக்கல் சவுந்தரநாயகம், அ.தி.சபையின் மாகாண முதல்வர் டி.நேசகுமார் ஆகியோரும் கௌரவ விருநதினராக யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளர் எஸ்.இளம்பருதியும் கலந்து கொண்டனர். (ப-110)

# பாலாஜிக்குப் பதிலாக அமித் பண்டாரி

தமிழக வீரர் பாலாஜிக்குப் பதில் அமித் பண்டாரி இந்திய



கிரிக்கெற் அணியில் இணைய ஐ.சி.சி.ஒப்புதல் அளித்துள்ளது.

மினி உலகக்கோப்பை கிரிக்கெற் தொடருக்கான இந்திய அணியில் பாலாஜி கடைசி நேரத்தில் இடம் பெறமுடியவில்லை. அடிவயிற்றுப் பகுதியில் காயம் காரணமாக அவர் நாடு திரும்ப முடிவு செய்தார். அவருக்குப் பதில் வேகப்பந்து வீச்சாளர் அமித் பண்டாரியை அணியில் சோக்க இநதிய கிரிக்கெற்சபை முடிவுசெய்தது. தவிர்க்க முடியாத மற்றும் மருத்துவக் காரணங்களுக்காக மட்டும் வீரர்களை மாற்றிக் கொள்ளலாம் என்ற மினி உலகக் கோப்பை விதிகளின்படி, பாலாஜிக்குப்பதில் அமித் பண்டாரியைச் சேர்த்துக்கொள்ள ஐ. சி.சி.ஒப்புதல் அளித்துளளது. இதையடுத்து பண்டாரி இங்கிலாந்து சென்றுள்ளார். (ப-7)



**2004 V8 சுப்பர் கார் சம்பியன்சிப் வரிசைக் காரோட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்கான தகைமைப் போட்டியில் அன்ரு றோன்ஸ் முதலிடத்தை வகித்தார்.**

# இந்திய விளையாட்டு உலகின் உயரிய சாதனை விருதுகள்

இந்திய விளையாட்டு உலகின் உயரிய விருதுகள் அண்மையில் அறிவிக்கப்பட்டன. இதன் படி அர்ஜூனா விருதை ரத்தோரும், ரூபா ராஜிவ் கேல்ரத்னா விருதை அஞ்சுஜோர்ஜூம் பெறுகின்றனர். அஞ்சுவின் கணவரும் பயிற்சியாளருமான பாபி, துரோணாச்சார்யா விருதுக்கு (சிறந்த பயிற்சியாளருக்கான) தேர்வு செய்யப்பட்டுள்ளாா. இதைத தவிர கிரிக்கெற் அரங்கில் சுழல் பந்துவீச்சாளர் ஹர்பஜன்சிங், ஹொக்கி கோல்கீப்பர் தேவேஷ் சௌகான்உட்பட 15பேர் அர்ஜூனா விருதை பெறுகின்றனர்.

200சிறந்த விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கான விருதுகளை மத்திய அரசு அறிவித்தது. இந்த விருதுக்கு ரத்தோர் அஞ்சு ஜோர்ஜ் தேர்வுசெய்யப்பட்டது சிறபபம்சம் எதென்ஸ் ஒலிம்பிக்கில் இந்தியாவால் ஒரே ஒரு வெள்ளிப்பதக்கம் மட்டுமே பெறமுடிந்தது இந்த பதக்கத்தை வென்று நாட்டின் மானம் காத்த மேஜர் ரத்தோர் உரிய முறையில் கௌரவிக்கப்பட்டுள்ளார் இரட்டைக்குழல் துப்பாக்கி சுடுதல் பிரிவில் வெனறு சாதித்த இவருக்கு அர்ஜூனா விருது வழங்கப்படுகிறது.

இதேபோல் எதென்சில் இந்திய மக்களின் எதிர்பார்ப்பாக விளங்கிய அஞ்சுபாபு ஜோர்ஜ் ராஜிவகேல் ரத்னா விருதை பெறுகிறார். எதென்ஸ் ஒலிம்பிக் நீளம் தாண்டுதல் இறு திச சுற்றுவரை முன்னேறிய இவா பதக்கத்தைதான் பெற இயலவில்லை. ஆறாவது இடம்பெற்ற இவர் அதிகபட்சமாக 6.83மீற்றர் தூரம் தாண்டி புதிய தேசிய சாதனை படைத்து ஆறுதல் தேடினார். இதை தவிர 2003பாரிஸ உலக தடகள போட்டியில் பங்கு பற்றி வெண்கலம் வென்றும் இந்தியாவுக்கு பெருமை சேர்த்தார்.

இவரது இந்த சாதனைகளுக்கு இப்போது தகுதியான விருது வழங்கப்படவுள்ளது அஞ்சுவுக்குப் பக்கபலமாக இருந்த கணவரும் சிறந்த பயிர்சியாளருமான பாபிக்கு துரோணாச்சாரியா விருது வழங்கப்படுகிறது. சிறந்த பயிற்சியாளருக்கான இந்த விருதை பாபி பெறுவதன் மூலம் ஒரே குடும்பத்தில் இருவர் உயரிய விருதை தட்டிச்செலகின்றனர். கணவருக்கும் தனக்கும் விருது கிடைத்ததில் இரட்டை மகிழ்ச்சியில் உள்ளார் அஞ்சு. (ப)

# மாகாணமட்ட தமிழ்மொழித்திறன் எழுத்தாக்கப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடைபெற்ற மாகாண மட்டத் தமிழ்மொழி திறன்விருத்தி எழுத்தாக்கப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

மேற்படி மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை சென்மேரிஸ் கல்லூரியில் நடைபெறவுள்ள தமிழ்மொழித் தினவிழாவில் வைத்து வழங்கப்படவுள்ளன.

எனவே,வெற்றிடைந்த மாணவர்கள் அனைவரையும் நாளை அங்கு சமுகமளித்துப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ள, அதேநேரம் அங்கு சமுகமளிக்க இயலாதவர்களுக்கு அவரவர் பாடசாலைகளுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மாகாண மட்ட எழுத்தாக்கப் போட்டிகளில் வெற்றிபெற்றோரின் பெயர் விபரம் வருமாறு:

**ஆக்கம் எழுத்துப் பிரிவு-1**

| | |
|---|---|
| 1 ஆம் இடம் : த.அபிநயா | சாவகச்சேரி ஆரம்பப் பாடசாலை. |
| 2 ஆம் இடம் : க.பா.பஸ்லீனா | தி/ அல்-பத்தா மு.வித்தி. |
| 3ஆம் இடம் : சீ.வினோஜா | மட்/குமார கபாலியர் கிராமம் வித்தி. |

**கட்டுரை-வரைதல் - கடிதம் எழுதல் பிரிவு - 2**

| | |
|---|---|
| 1 ஆம் இடம் : எச்.இஸ்ஸத் சமீஹ | கமு/ஆயிஷா பெ.ம.வித்தி. |
| 2 ஆம் இடம் : த.கோபிகா | கிளி/முருகானந்தா ம.வித்தி. |
| 3 ஆம் இடம் : ஏ.எம்.பாத்திமா முபாஸியா | மட்/ஓட்டமாவடி பாத்திமா ம.ம.வித்தி. |

**கட்டுரை - வரைதல் - கடிதம் எழுதல் பிரிவு - 3**

| | |
|---|---|
| 1 ஆம் இடம் : பா.ஜசிந்தா | யா/வேம்படி மகளிர் கல்லூரி. |
| 2 ஆம் இடம் : ந.பவித்ரா | கிளி/ புனித திரேசா ம.வித்தி. |
| 3 ஆம் இடம் : ர.ஆரணி | தி/சென். மேரிஸ் கல்லூரி. |

**கட்டுரை வரைதல் - இலக்கியம் நயத்தல் பிரிவு - 4**

| | |
|---|---|
| 1 ஆம் இடம் : வா.தர்மிஷா | யூனியன் கல்லூரி. |
| 2 ஆம் இடம் : மு.ச. பாத்திமா சித்திக்கா | கமு/அல்-மஸ்கர் பெ.உ.பாட. |
| 3 ஆம் இடம் ; மு.நி.அ.பாத்திமா பர்ஹத் | மட்/ மில்லத் மகளிர் ம.வித்தி. |

**தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல் பிரிவு - 5**

| | |
|---|---|
| 1 ஆம் இடம் : த.சசிரேகா | மட்/மகாஜனா கல்லூரி. |
| 2 ஆம் இடம் : யு.எல்.றிஷானா | கமு/அல். மர்ஜான் மு. மகளிர் கல்லூரி. |
| 3 ஆம் இடம் : செல்வி ந.துகிர்தா | கிளி/ கிளிநொச்சி ம.வித்தி. |

**இலக்கணப் போட்டி பிரிவு - 4**

| | |
|---|---|
| 1 ஆம் இடம் : ஆ.பா.பாத்திமா றிபானா | மட்/மீரா மகளிர் ம.வித்தி. |
| 2 ஆம் இடம் : தி.சிறி ரஜீவன் | கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி. |
| 3 ஆம் இடம் : அ.அன்ரனிற் நிரோஜினி | ம/முல்லைத் தீவு ம.வித்தி. |

**இலக்கணப் போட்டி பிரிவு - 5**

| | |
|---|---|
| 1 ஆம் இடம் : தி.காயத்திரி | மகாஜனாக் கல்லூரி. |
| 2 ஆம் இடம் : மு.ச றினோஸா | கமு/சம்ஸ் மத்திய கல்லூரி. |
| 3 ஆம் இடம் : ஆ.பிரதீபன் | மட்/ கிரான்குளம் விநாயகர் ம.வித்தி. |

**திறனாய்வுப் போட்டி பிரிவு - 5**

| | |
|---|---|
| 1 ஆம் இடம் : வி.மயூரதாஸ் | புற்றளை ம.வித்தி. |
| 2 ஆம் இடம் : எம்.முஷாதிக் | கமு/அட்டாளைச் சேனை மு.மத்திய கல்லூரி |
| 3 ஆம் இடம் : எம்.இர்பானா | தி/அந்.நகார் மு.மகாவித்தி. |

**குறுநாடக ஆக்கப் பிரிவு - 4**

| | |
|---|---|
| 1 ஆம் இடம் : வே.சுபிதா | கிளி/நாகேஸ்வரா வித்தி. |
| 2 ஆம் இடம் : சௌ.கபிலா | கொழும்புத்துறை இந்து ம.வித்தி. |
| 3 ஆம் இடம் : ய.முகம்மது முபாசிர் | கமு/அல்- மதினா ம.வித்தி. |

**குறுநாடக ஆக்கப் பிரிவு - 5**

| | |
|---|---|
| 1 ஆம் இடம் : கு.அறிவழகன் | மல்லாகம் ம.வித்தி |
| 2 ஆம் இடம் : ஷ.நூர்ஜஹான் | தி.அல். மின.ஹாஜ் மு. வித்தி. |
| 3 ஆம் இடம் : கா.கஜிகரன் | வ/புதுக்குளம் ம.வித்தி |

**கவிதை ஆக்கப் பிரிவு - 4**

| | |
|---|---|
| 1 ஆம் இடம் : அ.அனுஷானி | சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. |
| 2 ஆம் இடம் : எஸ்.ஸரனி கிஷோகர் | மன்/புனித சவேரியார் ஆ.கல்லூரி |
| 3 ஆம் இடம் : த.நிதர்சன் | தி/இ.கி.மி.ச. ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி. |

**கவிதை ஆக்கப் பிரிவு - 5**

| | |
|---|---|
| 1 ஆம் இடம் : மு.றசீத் ஜுஸ்லா | மட்/மீரா மகளிர் ம.வித்தி. |
| 2 ஆம் இடம் : அ.ஜெ.டெனியஸ் | மு.வித்தியானந்தா கல்லூரி. |
| 3 ஆம் இடம் : கி. சிவருபன் | மட்டுவில் சந்திரபுர ம.வித்தி. |

**சிறுகதை ஆக்கப் பிரிவு - 4**

| | |
|---|---|
| 1 ஆம் இடம் : மு.கேதுஜா | கமு/விபுலானந்தா மத்திய கல்லூரி. |
| 2 ஆம் இடம் : கி.சிவபிரசாந்த் | தி/ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி |
| 3 ஆம் இடம் : நா.நிருபா | வ/சைவப்பிரகாச மகளிர் ம.வித்தி. |

**சிறுகதை ஆக்கப் பிரிவு -5**

| | |
|---|---|
| 1 ஆம் இடம் : ரா.ப.அரூஸ் | தி/ கிண்ணியா மத்திய கல்லூரி ம.வித்தி. |
| 2 ஆம் இடம் : யோ.ரிஷிகா | மானிப்பாய் மகளிர் கல்லூரி. |
| 3 ஆம் இடம் :க.லோக கீதா | சைவப்பிரகாச மகளிர் கல்லூரி. |

(ந)

# இயல்பு நிலையை ஏற்படுத்தக்கூடிய சமாதானத்தையே விரும்புகிறோம்

## நல்லூர்க் கோட்டப் பொறுப்பாளர் உரை

(யாழ்ப்பாணம்)

தியாகதீபம் லெப் கேணல் தியாகி திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் 3ஆம் நாளான நேற்றுக காலை நல்லூரில் அமைந துள்ள திலீபனின் நினைவுத்தூபி முன்றலில் இடம்பெற்ற நினைவுக் கூட்டத்தில் பிரதிக் கல்விப் பணிப பாளர் ந.வரதராஜா தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சுடரை கப்டன் நிலவ னின் சகோதரர் குமார் எற்றி வைக்க, ஈகச்சுடரை திருமதி க.சுப் பிரமணியம் ஏற்றிவைத்தார். தமி ழீழத் தேசியக்கொடியை யாழ்.நல் லூர்க கோட்டப் பொறுப்பாளர் செழி யன் ஏற்றிவைத்தார். மலர் மாலையை உதவிக் கல்விப் பணிப்பாளர் ராஜ லிங்கம் அணிவித்தார்.

நினைவுக் கூட்டத்தில் யாழ்.நல லூர்க் கோட்டப் பொறுப்பாளர் செழியன் உரையாற்றுகையில்,

அரசுக்கு நிகரான படைப்பலத் துடன் புலிகள் நிமிர்ந்து நிற்கின்ற னர். எந்த நிலையிலும் எந்தச் சவா லையும் நாங்கள் ஏற்றுக் கொள் ளத் தயாராகவுள்ளோம். மக்க ளின் இயல்பு நிலை மேம்பட வேண்டும்.

ஆயுதப் போராளியான திலீபன் அன்று அகிம்சைப் போராளியாக மாறினான். இன்றும் நாங்கள் மக்களின் வாழ்வுக்காக இயல்பு நிலையை ஏற்படுத்தக்கூடிய சமா தானத்தை விரும்புகின்றோம். சமாதானக் காலத்தில் 30க்கும் மேற்பட்ட போராளிகளை யுத்தம் நடாத்தாமல் இழந்துள்ளோம். தேசத்தைக் கட்டி எழுப்புவதற்காக சகல நிறுவக அமைப்புக் களையும் தேசியத் தலைவர் உருவாக்கியுள்ளார்.

எவருக்கும் அஞ்சாமல் மக்கள் புரட்சி வெடிக்கும் நேரம் நாம் எமது தேசத்தை நிர்மாணிப்போம் எனக் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் யாழ்.வலயக் கலவி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (ற-5)

# வலம்புரிச் சங்குகள் கண்டுபிடிப்பு

(மன்னார்)

மன்னார் பள்ளிமுனை கடல் பகுதியில் இரண்டு வலம்புரிச் சங்குகள் கண்டெடுக்கப்பட்டுள் ளன.

இதனையடுத்து பெருமளவான மக்கள் பள்ளிமுனைக் கடல் பகுதியில் திரண்டு வேறு வலம் புரிச் சங்குகளைத் தேடும் முயற்சி களில் ஈடுபட்டுவருகின்றனர்.

பல ஆயிரக் கணக்கான மக்கள் வலமபுரிச் சங்கைத் தேடுவதனால் குறிப்பிடப்பட்ட கடற்கரைப் பகுதி யில் என்றுமில்லாதவாறு பெரு மளவான மக்கள் நிறைந்திருப்ப தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வலம்புரிச் சங்குகள் ஒவ்வொன்றும் இரண்டு லட்சம் தொடக்கம் மூன்று லட்சம் ரூபா வரையில் விற்பனை செய்யப்படு வதாகவும் இதுவரை பதினைந்து சங்குகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

(ற-8)

## சதுரங்கப் பயிற்சி முகாம்


(சாவகச்சேரி)

இலங்கை சதுரங்க சம்மேளனத தலைவர் டெரிக் பெரேரா குழு வினரால் நடாத்தப்படும் சதுரங்கப் பயற்சி முகாம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30மணியள வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி யில் நடைபெறவுள்ளது. மேற்படி பயிற்சி நெறிக்கு சகல பாடசாலை களிலும் உள்ள சதுரங்க வீரர் களையும் மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வல யக் கல்விப் பணிப்பாளர் வ.செல வராஜா அறிவித்துள்ளார். (ப-127)



யாழ்.தேர்தல் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றைய தினம் யாழ்.செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்ட தழிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் மற்றும் அரச, அரச்சார்பற்ற நிறுவனங்களின் உயர் அதிகாரிகளையும் படங் களில் காணலாம்.





யாழ்.போக்குவரத்து பொலிஸான ஏற்பாட்டில் கொழும்பு போக்குவரத்து பொலிஸ் தலைமையகத்தில் இருந்து யாழ். குடாநாட்டுக்கு வருகை தந்த பொலிஸார், நேற்றுக்காலை யாழ். மத்தியகல்லூரி வீதியில், வீதி விபத்துக்களைத் தடுப்பது தொடர்பான வீதி நாடகத்தை பாடசாலை மாணவர்களுக்கு நடித்து காண்பித்த போது எடுக்கப்பட்டபடங்கள்.

படங்கள்: ஞா. ஐங்கரன்.

பல்லார் முனிப் பயனில் சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும் - குறள்

வலம்புரி

# எரிக்சொல்ஹெய்ம் சலித்துப்போய்விட்டார்

சமாதான முயற்சிகளில் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்ற நிலைப்பாட்டை நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் வெளிப்படையாக அறிவித்துள்ளார்.

அவரின் அறிவிப்பு எதிர்பார்க்கப்பட்டதொன்றாயினும், சமாதான முயற்சியின் நம்பிக்கையோடு ஈடுபட்ட ஒருவர் அந்த அறிவிப்பை வெளியிடுகின்ற போது எதிர்பார்க்கப்பட்ட விடயமும் அதிர்ச்சியை தருவது இயல்பானதே.

அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஒருவர் உயிர்பிழைப்பது அரிது எனினும் அந்தச் செய்தியை அந்த நோயாளிக்கு சிகிச்சை அளிக்கும் வைத்திய நிபுணரே அறிவிக்கும் போது அதனால் ஏற்படக்கூடிய அதிர்ச்சி எதிர்பார்ப்பில் இருந்து வித்தியாசமானதாகும்.

அவ் வகையில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு சமாதான முயற்சியை முன்னெடுக்கப் போவதில்லை என்ற விடயம் எதிர்பார்க்கப்பட்டதாயினும், அது நிஜப்படுகின்றபோது அதனால் ஏற்படக்கூடிய மனக்குழப்பம் தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

பூரண நம்பிக்கையோடு சமாதான முயற்சியில் ஈடுபட்ட நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் இரு தரப்பையும் பல தடவைகள் சந்தித்துவிட்டு மன விரக்தியோடு "சமாதான முயற்சியில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை" என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினையில் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பத்தில் இருந்து இன்று வரை முன்னெடுத்துச் சென்றவர் எரிக்சொல்ஹெய்ம்.

நோர்வேயின் ஆட்சியில் மாற்றம் ஏற்பட்டு எரிக்சொல்ஹெய்ம் அங்கம் வகித்த அமைப்பு அரசாட்சியை இழந்தபோதிலும், நோர்வேயின் புதிய அரசு இலங்கை இனப்பிரச்சினையில் எரிக்சொல்ஹெய்மின் பங்களிப்பை இடைநிறுத்தாமல் அவரையும் இணைத்துக் கொண்டு சமாதான முயற்சியை முன்னெடுத்தது. இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கம் நோர்வேயிடம் இருந்ததன் காரணமாகவே எதிர்க்கட்சியைச் சேர்ந்த எரிக்சொல்ஹெய்ம்மின் உதவியை நோர்வேயின் புதிய அரசும் கைவிடாமல் அவர் மூலமாக சமாதான முயற்சியை மேற்கொண்டது.

இருந்தும் நோர்வேயின் அர்ப்பணிப்பு நிறைந்த பங்களிப்பை உணர்ந்துகொள்ளும் ஆற்றல் - அறிவு-மனநிலை தென்னிலங்கை இனவாதிகளிடம் இருக்கவில்லை. அதன் காரணமாக பௌத்த பிக்குகள் நோர்வே நாட்டு தேசியக் கொடிக்குத் தீ மூட்டினர். ஜே.வி.யினர் நோர்வேயின் கொழும்புத் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தனர். சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்மை இலங் கைக்கு வரவிடாமல் தடை செய்யவேண்டும் என அறிக்கை விட்டனர்.

இருந்தும் இவற்றை எல்லாம் கடந்து பெருந்தன்மையோடு பணியாற்றிய எரிக்சொல்ஹெய்ம் இப்போது விடுத்த அறிவிப்பு சமாதான முயற்சியில் நோர்வே சலித்துவிட்டது என்ற தகவலை வெளிப்படுத்தியுள்ளது.

சமாதான முயற்சி என்பதற்கும் ஓர் எல்லை உண்டு. நடக்கமுடியாத ஒன்றிற்காக முயற்சிப்பது என்பது விழலுக்கிறைத்த நீராகிவிடும் என்ற தத்துவத்தின் அடிப்படையில் சமாதான முயற்சி குறித்த ஓர் திடமான முடிவை நோர்வே அரசு எடுக்கப் போகின்றது என்பதை இப்போது உணரக்கூடியதாக உள்ளது.

எத்தனையோ எதிர்ப்புக்கள் வந்தபோதிலும் அமைதியாக இருந்து எரிக்சொல்ஹெய்ம் சமாதான முயற்சியில் முன்னேற்றம் ஏற்படவில்லை என விடுத்த அறிவிப்புக்கு அப்பால் தனக்குள் கணித்து வைத்திருந்த ஓர் உண்மையையும் கூடவே கூறியுள்ளார்.

அதாவது அரசுக்கும் புலிகளுக்குமிடையில் உடன்படிக்கை ஏற்படாமல் யுத்தம் நடந்திருந்தால் இருபதாயிரம் உயிர்கள் பலியாகியிருக்கும் என்பதே அந்த உண்மையாகும். இதிலிருந்து இலங்கை மக்கள் எதைப் புரிந்துகொள்ளப்போகிறார்கள். ஆம் மீண்டும் யுத்தம் நடந்தால்.... எத்தனை மனித உயிர்கள் பலியாகும்.

எரிக்சொல்லின் ஆழ்ந்த அறிவின் அறிவிப்பாக-இறுதி எச்சரிக்கையாக இதனை ஏற்றுக்கொள்ளலாம்.

# சம்பள முரண்பாடுகள் நீக்கப்படாமை; புதிய இடதுசாரி முன்னணி கண்டனம்

(கொழும்பு)

சம்பள முரண்பாடுகளை நீக்கக்கோரி பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்கள் மேற்கொண்டு வரும் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வகையிலான எதுவித உறுதிமொழிகளையோ ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையோ எடுக்காததைக் கண்டித்து புதிய இடதுசாரி முன்னணி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

'இலவசக் கல்வியைக் குழி தோண்டிப் புதைக்கும் கூட்டணி அரசின் சதியைத் தோற்கடிப்போம்' எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள மேற்படி அறிக்கையில்,

பல்கலைக்கழகங்களிலுள்ள கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்கும்படி கோரி இம்மாதம் முதலாம் திகதி முதல் மேற்கொண்ட வேலைநிறுத்தத்தைக கைவிடச் செய்வதற்கு சந்திரிகா ஜே.வி.பி. கூட்டணி அரசு எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இவ்வேலை நிறுத்தத்தைத் தற்காலிகமாகவேனும் இடைநிறுத்துவதற்குக் கல்வியமைச்சின் உறுதிமொழிகளைக் கேட்டபொழுது அவ் வேண்டுகோளை நிராகரித்ததன் மூலம் இவ்வேலை நிறுத்தம் தொடரப்படுவதை கூட்டு முன்னணி அரசு விரும்புவது போன்று தெரிகின்றது.

இவ்வேலை நிறுத்த விவகாரம் தீர்க்கப்படாததன் காரணமாக புதிய வருடத்தில் புதிய மாணவர்களைப் பாடசாலைக்குச் சேர்க்கும் வேலைகள் தாமதமாகி உள்ளதுடன் இறுதி ஆண்டுப் பரீட்சைகளும் தடைப்பட்டுள்ளதோடு, பல்கலைக்கழக வட்டாரங்களில் புதிய பிரச்சினைகளும் தோன்றியுள்ளன. அத்தோடு கூட்டணி அரசு பல்கலைக்கழகங்களை மூடிவைத்துள்ளதால பல்கலைக்கழக மாணவர்களின் கல்விக்கும் பெரும் நாசங்களைச் செய்துள்ளது.

கூட்டணி அரசு மேற்கொண்டுள்ள இந்நடவடிக்கையால் கல்வியைத் தனியார் மயப்படுத்தும் நிலை தோன்றியுள்ளதா? என்ற சந்தேகம் தோன்றுகிறது. ஏனெனில், இன்று சர்வதேசப் பாடசாலைகளில் கல்வி பயிலும் செல்வந்தர்களின் பிள்ளைகளின் கல்வியை எந்த வகையிலும் இவை பாதிக்கவில்லை.பல்கலைக் கழகங்களில் எது நடந்தாலும் கூக்குரல் எழுப்பும் அரசின் பிரதான பங்காளியான மக்கள் விடுதலை முன்னணியின் மாணவர் அமைப்பான பல்கலைக்கழகங்களுக்கிடையேயான மாணவர் ஒன்றியம் பல்கலைக்கழகங்களை மூடிவிடும் இச்சதிக்கு ஆதரவாக மௌன நிலையைக் கடைப்பிடிக்கிறது.

ஆகையினால் சம்பள முரண்பாட்டை நீக்கும்படி கோரிப் போராட்டத்தை நடத்தும் கல்விசாரா ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று வேலை நிறுததத்தை தீர்த்து, கூடிய விரைவில் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியைத் தொடர வழி ஏற்படுத்தும்படி அரசை வலியுறுத்துவதோடு பல்கலைக்கழகங்களை மூடும் சதியை அரசு மேற்கொண்டால், அதை தோல்வியடையச் செய்து இலவசக் கல்வியைக் காக்க அனைத்து உழைக்கும் மக்களும், இடதுசாரிகளும், முற்போக்கு சக்திகளும் முன்வர வேண்டும் என வேண்டுகிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# காணாமல் போன சிறுவர்கள் கண்டுபிடிப்பு

(கிளிநொச்சி)

கடந்த முதலாம் திகதி முதல் காணாமல் போன சிறுவர்கள் இருவர் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

முழங்காவிலைச் சேர்ந்த சூரியகுமார் மதன் (வயது12), புதுக்குடியிருப்பைச் சேர்ந்த பத்மராஜா சுமன் (வயது12) ஆகிய இருவருமே காணாமல் போயிருந்தனர். இது விடயம் தொடர்பாக சிறுவர்களது பெற்றோர் கிளிநொச்சியிலுள்ள வடக்குக்கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இம் முறைப்பாட்டை அடுத்து மனித உரிமைகள் செயலகம் எடுத்த முயற்சியின் பயனாக மேற்படி சிறுவர்கள் இருவரும் பெற்றோரிடம் ஒப்படைக்கபபட்டனர். மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் வணக்கத்துக்குரிய கருணாரட்ணம் அடிகளார் சிறுவர்களை ஒப்படைத்தார். (த-121)

# கிராமிய வங்கியின் கிளை மன்னாரில் திறந்துவைப்பு

(மன்னார்)

கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளையொன்று கடந்த புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மன்னார் அடம்பனில் திறந்து வைக்கப்பட்டது. கிராமிய அபிவிருத்தி வங்கியின் பொது மேலாளர் செ.தவக்குமார் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மங்கள விளக்கினை மாவீரர்களான லெப். ரோம்,கப்டன் செல்வன ஆகியோரது தந்தையார் செல்வராசாவும், விவசாய சம்மேளனத் தலைவர் பூராசா மற்றும் கமநல உதவி ஆணையாளர் திருமதி அ.ஸ்ராலி டிமல் ஆகியோரும் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக் கொடியினை மன்னார் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இனியவன் ஏற்றினார். வங்கியின் பெயர் பலகையினை மன்னார் மறைமாவட்ட ஆஜர் இராஜப்பு ஜோசப் ஆண்டகை திரைநீக்கம் செய்து வைத்தார். வங்கிக் கட்டடத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப்பொறுப்பாளர் சி.கரிகாலன் திறந்து வைத்தார். (ற)

# ஊர்காவல் படையினரை விடுவிக்க விடுதலைப் புலிகள் நிபந்தனை

## படையினரின் பெற்றோர் உண்ணாவிரதம்

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊர்காவல் படையினர் விடுதலை செய்ய வேண்டுமானால் மட்டக்களப்பில் கைது செயயப்பட்ட தமது போராளிகள் 8 பேரில இருவா விடுதலை செய்யப்படவேண்டும் என விடுதலைப்புலிகள் கோரியுள்ளனர்.

புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் ஆயுதங்களுடன் நடமாடினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள பிரஸ்தாப ஊர்காவல் படையினர் இருவரையும் விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி திருகோணமலை மாவட்ட பிக்குமார் சங்கத்தின செயலாளர் உபரட்ண தேரர் ஜனாதிபதியின் செயலாளருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக மாவட்ட கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊர்காவல் படையினர் இருவரினதும் பெற்றோர் நேற்று மூன்றாவது நாளாகவும் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். (த-8)

# எந்த சக்தியாலும் நசுக்க முடியாதவாறு தமிழ் மக்கள் பலமுடன் இருக்க வேண்டும்

## புலிகளின் குரல் பொறுப்பாளர் உரை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்க அரசாங்கமானது போரைத் திணிக்கும் செயற்பாடுகளிலேயே நாட்டம் கொண்டுள்ளது. எனவே இதனை எதிர்கொள்ள தமிழ் மக்கள் தயாராக இருப்பதே இன்றைய காலத்தின் தேவையாகும் என புலிகளின் குரல் பொறுப்பாளர் ந. தமிழன்பன் தெரிவித்துள்ளார்.

நல்லூரில் இடம்பெற்ற தியாகி திலீபன் 2ம் நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய அரசின் முகத்திரையை கிழித்தெறியும் வகையிலேயே தியாகி திலீபனின் உண்ணாநோன்பு அமைந்திருந்தது. காலம் காலமாக பல்வேறு மட்டங்களில் மக்களின் போராட்டங்களை நசுக்கி விடுவதற்கான செயற்பாடுகளில் பல்வேறு தரத்தினரும் ஈடுபட்டு வந்துள்ளனர்.

எனவே எந்த சக்தியாலும் நசுக்கி விடமுடியாத சக்தியாக தமிழ் மக்கள் இருக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (ற-8)

# கச்சான் கடையில் திருட்டு சிறுவன் நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய தேர் உற்சவத்தின் போது கச்சான் கடை ஒன்றில் 25 ஆயிரம் ரூபா பணம் திருடியதாகக் குற்றம்சாட்டப்பட்ட சிறுவன் ஒருவன் பொலிஸரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

யாழ். நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா முன்னிலையில் சிறுவனை ஆஜர் செய்த போது, அவரை நன்னடத்தைக்காக கானான் சிறுவர் இல்லத்தில் சேர்க்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

சம்பவ தினமன்று கச்சான் கடையில் பணத்தைத் திருடிக்கொண்டு அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்ற சிறுவனை பொலிஸார் மடக்கிப்பிடித்தனர். சுன்னாகத்தைச் சேர்ந்த பிரஸ்தாப சிறுவன் நேற்று முன் தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். (ச-19)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

என் மகனே! மரணம் நேருவதைத் தடுக்க முடியாது. எனவே சற்களைப் போலவும் கட்டைகளைப் போலவும செத்து மடிவதை விட வீரர்களைப் போல இறப்பது மேலானது அல்லவா? அதிலும் குறிப்பாக, மற்றவர்களுக்கு ஒரு சிறிதளவிற்கு நன்மை செய்வதற்காக அழிந்துபோவது மிகவும் நல்லது.

சுவாமி விவேகானந்தர்

# சமாதான முயற்சியில் முழு பொறுப்பு வகிக்க வேண்டும்

## ஜனாதிபதியிடம் மக்கள் சமாதான மன்றம் கோரிக்கை

(கொழும்பு)

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்குப் பொறுப்பாக இணைத் தலைவர்களை நியமிப்பதிலும் பார்க்க அதன் முழுப் பொறுப்பினையும், நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மக்கள் சமாதான மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர் வண. மாதம்பாகம அஸ்ஸஜி தேரர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

சமாதான முயற்சிகளுக்குப் பொறுப்பான இணைத்தலைவர்களாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் நியமிப்பது என்ற தீர்மானத்தை எதிர்த்துள்ள மக்கள் சமாதான மன்றம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

சமாதான முயற்சிகளுக்கு இணைத் தலைமையை ஏற்படுத்துவது குறித்து மக்கள் சமாதான மன்றம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தீர்மானம் எதனையும் எடுக்க முடியாத பிரதிநிதிகளை இணைத் தலைவர்களாக நியமிப்பதின் மூலம் சமாதான முயற்சிகள் பின்னடைவையே சந்திக்க நேரிடும்,

கடந்தகால சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும் தீர்மானம் எடுக்கமுடியாத பிரதிநிதிகள் பங்குபற்றியமையால் பேச்சுவார்த்தைகள் இணக்கமின்றி நிறைவுபெற்ற நிலையே இதற்கும் ஏற்படக்கூடும்.

அரசாங்கத்தின் இணைத்தலைமை வேண்டாம் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளிப்போம் என்று ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்திருந்த போதும் அவர்கள் ஆதரவு அளிப்பார்களா? என்பது சந்தேகத்திற்குரியதே.

இந் நிலையில் சமாதான முயற்சிகளில் எதிர்க்கட்சிகள் பங்களிப்புச் செய்யக்கூடிய வகையில் அவர்களுக்கு வாய்ப்பளிக்கக் கூடியதான சந்தர்ப்பங்கள் இருக்க வேண்டும் என்றும் தேரர் குறிப்பிட்டுள்ளார்.(ம)

## ரட்ணாயக்கா பதவிப் பிரமாணம்

(கொழும்பு)

மத்திய மற்றும் சிறிய பெருந்தோட்ட கைத்தொழில், கிராமிய மனிதவள அபிவிருத்தி அமைச்சராக சி.பி.ரட்ணாயக்கா நேற்று ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

இலங்கையின் அரசியல் யாப்புக்கு அமைவாக சி.பி. ரட்ணாயக்காவுக்கு இவ்வமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவு அளிக்க முன்வந்ததை அடுத்து முத்து சிவலிங்கத்திற்கு இவர் வகித்து வந்த தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு வழங்கப்பட்டதையடுத்து சி.பி. ரட்ணாயக்கா தனது அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்து முத்து சிவலிங்கத்திற்கு தனது அமைச்சுப் பதவியை வழங்குவதற்கு வழிசமைத்தார். இதனைத் தொடர்ந்து விரக்தி நிலையில் இருந்து வந்த சி.பி. ரட்ணாயக்காவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைத்து மலையக மக்களுக்கு சேவையாற்றக் கூடிய அமைச்சுப் பதவியை வழங்குவதாக வாக்குறுதி அளித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## வீரவணக்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு முத்தையன் கட்டுப் பகுதியில் கடந்த 14ந் திகதி ஏற்பட்ட தவறுதலான விபத்தில் வீரச்சாவடைந்த வீரவேங்கை அன்புச்சிட்டு என்று அழைக்கப்படும் ஆனந்தராசா அஜீந்தா (யாழ்ப்பாணம்) மாவீரனின் வித்துடல் நேற்று அவரது இல்லத்தில் இறுதி வணக்கத்திற்காக வைக்கப்பட்டது.

பின்னர் அவரது வித்துடல் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் எடுத்துவரப்பட்டு சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வீர வணக்கக் கூட்டம் நடைபெற்றது.

பெற்றோர் மாவீரரின் பூதவுடலுக்கு மலர் மாலை அணிவித்தார். வீரவணக்க உரையினை யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து மாவீரரின் வித்துடல் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று பி.பகல் 1.00 மணிக்கு புதைகுழியில் விதைக்கப்பட்டது. (ச-8)

### இராணுவம்...

னிக்கப்பட்டது. எனினும் அச் சந்திப்புகள் இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டன.

இதேவேளை புதன்கிழமை நடைபெறவுள்ள இச் சந்திப்பிற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு விடுதலைப் புலிகள் போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் கேட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. இச் சந்திப்பு வவுணதீவு யுத்த சூனிய பிரதேசத்தில் நடைபெறவிருக்கின்றது. இதனை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரொப் ஹொக்லன்ட் உறுதிப்படுத்தினார். (ச)

### ஐ.நா. அபிவிருத்தி...

பற்ற நிறுவன ஒன்றியப் பிரதிநிதிகளுடனும் ஐ.நா. அபிவிருத்தித் திட்டப் பிரதிநிதிகள் கலந்துரையாடினர். இச் சந்திப்பில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு, முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் என்பன குறித்து அவர்கள் விரிவாகக் கேட்டறிந்தனர். (த)

## மருத்துவ பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் 17ஆம் ஆண்டு நிறைவையொட்டி தென்மராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை சாவகச்சேரி லயன்ஸ் கழக அனுசரணையுடன் நடாத்தும் மருத்துவ பரிசோதனை முகாம் நாளை காலை 8 மணியளவில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப் பரிசோதனை முகாமில் நீரிழிவு, கண்பார்வை, இரத்த அழுத்தம், வாய்ப்புற்று நோய், ஆனைக்கால் நோய் ஆகியவற்றுக்கான பரிசோதனைகள் நடாத்தப்படவுள்ளன.

இம் மருத்துவ முகாமில் தென்மராட்சிப் பிரதேச மக்களைக் கலந்துகொண்டு பயன் பெறுமாறு தென்மராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை கேட்டுள்ளது. (ப-47)

## சிறுவர்தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படும் சிறுவர்தின நிகழ்வுகள் நாளைக் காலை 9.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நீதிபதி இ.த. விக்னராசா கலந்துகொள்ளவுள்ளார். (ச)

### சமாதான...

வரும் சொல்ஹெய்ம் நேற்று ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து ஆராய்ந்தார்.

இச் சந்திப்பின் போது இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் உடனிருந்தார்.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதில் காணப்படுகின்ற தடைகள் குறித்தும் சமாதான முயற்சிகளை தொடர்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பங்களிப்பு எவ்வகையில் அமையும் என்பது குறித்தும் ரணில் விக்கிரமசிங்காவிடம் எரிக் சொல்ஹெய்ம் விரிவாகப் பேசினார்.

இதன்போது சமாதான முயற்சிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்கும் என்று ரணில் விக்கிரமசிங்க எரிக்சொலிடம் உறுதியளித்ததாகத் தெரியவருகிறது. மேலும் அரசாங்கம் சமாதான முயற்சிகளை ஆரம்பித்தால். அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்கும் என்றும் இச் சந்திப்பின் போது விக்கிரமசிங்க உறுதியளித்ததாகத் தெரியவருகிறது.

இதேவேளை சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து ஆக்கபூர்வமான முடிவு இதுவரை அரச தரப்பிலிருந்து வெளிவராத நிலையில் சமாதான முன்னெடுப்புக்களில் முக்கிய திருப்பங்கள் எதுவும் இப்போது ஏற்பட மாட்டாது என அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (இ)

# போக்குவரத்து நடைமுறை பற்றி பொதுமக்களுக்கு விளக்கம்

(பொலிகண்டி)

நெல்லியடிச் சந்தியில் நேற்று காலை 9.30 மணியளவில் நெல்லியடி பொலிஸ் படை அதிகாரிகளினால் வீதிப் போக்குவரத்து பற்றி விளக்கமளிக்கும் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதில் வீதியில் எவ்வாறு வாகனங்கள், துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் என்பனவற்றை செலுத்துவது என்றும், வாகனங்களை எவ்வாறு செலுத்தக்கூடாது என்றும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். (ப-106)

## துப்பாக்கி நபர் சிலாபத்தில் கைது

(புத்தளம்)

துப்பாக்கி மற்றும் கைக்குண்டு வைத்திருந்த நபர் ஒருவரை சிலாபம் பொலிஸார் நேற்று மாலை கைது செய்துள்ளனர்.

சிலாபம் நகரில் வர்த்தகர் ஒருவரை அச்சுறுத்திப் பணத்தைக் கொள்ளையிட முற்படுகையிலேயே பிரஸ்தாப நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரஸ்தாப நபரை கைது செய்ய முற்பட்ட வேளை அவர் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந் நபர் இராணுவத்திலிருந்து தப்பி வந்தவரென சிலாபம் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சந்தன் அலககோன் தெரிவித்துள்ளார். மாதம்பை பகுதி வீடொன்றில் தங்கியிருந்தே, கொள்ளைச் சம்பவங்களுக்கான திட்டத்தை தீட்டி வந்ததாகவும் அவர் கூறினார்.

மேலும் பல கொள்ளை சம்பவங்களுடன் இவருக்கு தொடர்பு இருப்பது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. (ச-15)

## வணிகர் கழக முன்னாள் தலைவர் காலமானார்

(யாழ்ப்பாணம்)

மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர், மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கு மரணமானார்.

யாழ் வணிகர் கழக முன்னாள் தலைவர் எஸ். குலரட்ணம் (வயது 71) என்பவரே இவ்வாறு மரணமானவர் ஆவார்.

பிரஸ்தாப நபர் கடந்த 12ந் திகதி நல்லூர் முருகன் ஆலய சப்பறத் திருவிழாவுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பியபோது குமாரசாமி வீதியில் மயக்கமடைந்த நிலையில் கிடந்ததாகவும் அவரை அப்பகுதி மக்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் தெரியவருகிறது.

ஆனால் பிரஸ்தாப நபர் எவ்வாறு மயக்கமானார். குமாரசாமி வீதிக்கு ஏன் சென்றார் என்ற விபரங்கள் உறவினர்களுக்குகூட புரியாத மர்மமான நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டவர் நேற்று மரணமாகியுள்ளார். (இ)

## போராளி விபத்தில் சாவு

(கிளிநொச்சி)

தவறுதலாக இடம்பெற்ற விபத்தில் போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் பளைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் கப்டன் இளங்கோவன் (சுப்பையா குகநாதன், 7ம் வாய்க்கால், கிளிநொச்சி) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

இம் மாவீரருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (ச)

## 12 ஈழத்தமிழ் அகதிகள் தாயகம் திரும்பினர்

(மன்னார்)

தமிழ் நாட்டிலிருந்து 12 ஈழத் தமிழ் அகதிகள் கடந்த புதன்கிழமை தாயகம் திரும்பியுள்ளனர்.

இராமேஸ்வரத்திலிருந்து சிறிய படகில் வந்த இவர்கள் மன்னார் பேசாலைக் கடற்பகுதியில் தரையிறங்கி சுயமாகவே தமது சொந்த இடங்களான வவுனியா, செட்டிகுளம், தலைமன்னார் ஆகிய இடங்களுக்குச் சென்றுள்ளனர். (ற-8)

## இலங்கை சதுரங்க சம்மேளன தலைவர் யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சதுரங்க சம்மேளனத் தலைவரும் தெற்காசிய சதுரங்க செயலாளருமான டெறிக் வி. பெரேரா நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

யாழ். வந்த அவர் இங்கு சதுரங்க பயிற்சிக்கு முகாம்களை நடாத்தவுள்ளார். அதனடிப்படையில் இன்று காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பயிற்சி முகாம்களை மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை யாழ். குடாவிலுள்ள பீச் இன் ஹொட்டலில் காலை 8.30 மணிக்கு பயிற்சி முகாமை மேற்கொள்ளவுள்ளார். இப் பயிற்சி முகாம்களில் ஆர்வலர்கள் எவரும் கலந்துகொள்ள முடியும் என யாழ். சதுரங்க சம்மேளன செயலாளர் எஸ். வித்தியாதரன் கேட்டுள்ளார். (ச)

## விடுமுறைக்கு முன்னர் பாடநூல்கள் விநியோகம்

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலை மாணவர்களுக்கான பாடநூல்களும் சீருடைகளும் மூன்றாம் தவணை விடுமுறைக்கு முன்னர் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக பாடநூல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதிக் கல்வி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாடநூல்கள் வழங்கு ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் முதலாம் தவணை ஆரம்பமாகி சில மாதங்கள் கடந்த பின்னரே பாடநூல்கள் வழங்கப்பட்டு வந்ததாக சுட்டிக்காட்டிய அமைச்சர், இம்முறை அதிகாரிகளின் முயற்சியினால் இந் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

2005 ஆம் ஆண்டுக்கான இலவச பாடநூல்களை வழங்குவதற்கு 2 கோடியே 40 இலட்சம் பாடப் புத்தகங்கள் நாட்டில் உள்ள 350 வலயக் கல்விக் பணிமனைகள் ஊடாக விநியோகிக்கப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (ற-ம-08)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.09.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.